Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 புரட்டாதி- 31 ஹிஜ்ரி 1428 ரம்ழான் 13 (17.10.2005) திங்கட்கிழமை இதழ்:17

## கொழும்பு - மோதரவில் சக்திவாய்ந்த குண்டு மீட்பு!

கொழும்பு —

கொழும்பு – மோதர பகுதியில் சக்திவாய்ந்த குண்டொன்றை பொலிஸார் கண்டுபிடித்தனர்.

பேர்குசன் வீதி – மோதர என்ற இடத்தில் – இராணுவ முகாமிலிருந்து 300 மீற்றர் தொலைவிலேயே இந்தக் குண்டு கண்டுபிடிக் கப்பட்டது.

அருகிலுள்ள பௌத்த ஆலயம் ஒன்றின் தலைவரான ஓட்டோ சாரதி ஒருவர் கொடுத்த தகவலை அடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் நேற்றுக்காலை 9.45 மணியள வில் இந்தக் குண்டை கண்டுபிடித்தனர்.

பிஸ்கட் ரின் ஒன்றில் அடைத்து வைக்கப் பட்டிருந்த இந்தக் குண்டு, சுமார் 2 கிலோ உயர்சக்தி (12 ஆம் பக்கம் பார்க்க)



## சந்திரிகா - ரணில் சந்திப்பு எதிர்வரும் 24 ஆம் திகதி!



கொழும்பு —

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவிற்கும் இடையிலான சந்திப்பு அடுத்த வாரம் இடம்பெறவுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஐக்கிய தேசியக்கட்சிக்கும் இடையி லான தேசிய நிலை, கருத்து ஒற்றுமை மற்றும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் என்பன தொடர் பாக பேசப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகி யுள்ளன.

ஏற்கனவே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் 20 ஆம் திகதிக்கும் 27ஆம் திகதிக் கும் இடைப்பட்ட தினத்தில் சந்திக்குமாறு ரணில் விக்கிரமசிங்கவை கடிதம் மூலம் கோரியிருந்தார்.

இந்த நிலையில் எதிர்வரும் 24 ஆம் திகதி யன்று ஜனாதிபதிக்கும் ரணில் விக்கிரமசிங்க வுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, ஜனாதிபதியின் அழைப்பின் பின்னர் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் அவ ருக்கு அனுப்பிய பதிலில் – தேசிய பிரச்சினையில் தமது நிலைப்பாடு என்ன என்பதைத் தெரிவித் திருந்ததுடன், ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனா திபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தையும் இணைத் ந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

## மட்டக்களப்பில் தாக்குதல்; படையினர் இருவர் காயம்!

மட்டக்களப்பு —


மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாழைச் சேனை – சுங்காங்கேணி பகுதியில் பாது காப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படை யினர் மீது இனந்தெரியாத நபர்கள் நேற்று மாலை 6.15 மணியளவில் மேற்கொண்ட தாக்குதலில் இரு படையினர் உட்பட நால் வர் படுகாயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலின்போது நாகராஜா விஜயா (வயது 18) மற்றும் சின்னத்தம்பி கனகம்மா (வயது 36) ஆகிய பொதுமக்களே காயமடைந்தனர்.

இவர்கள் வாழைச்சேனை மருத்துவ மனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ள னர்.

மரபுவழித் தாயகம் – பொதுக்கட்டமைப்பு – சுயநிர்ணய உரிமை

# மகிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அனைத்துமே அடியோடு நிராகரிப்பு!



கொழும்பு —

தமிழ் மக்களின் மரபு வழித்தாயகக் கோட்பாட்டையோ, சுயநிர்ணய உரிமைக் கொள்கையையோ ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் -

சுனாமி நிவாரணப் பொதுக்கட்டமைப்பு நடைமுறைப் படுத்தப்படமாட்டாதெனவும் பிரமதர் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாக 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது-

இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பிரதமரால் உள்ள டக்கப்பட்ட விடயங்கள் குறித்து அந்தப் பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

சகல சமூகங்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில், சமாதான வழியில் அரசியல் தீர்வு காணப்படும். ஆனால், விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள மரபுவழித் தாயகம் மற்றும் சுயநிர்ணய உரிமை என்பன நிராகரிக்கப் படும்.

இலங்கையின் சுதந்திரம், இறைமை, பூகோள ஒருமைப் பாடு, தேசிய அடையாளம் என்பன பாதுகாக்கப்படுவதுடன், தேசியப் பிரச்சினைக்கு சமாதான வழிமூலம் தீர்வு காணப் படும். இந்தத் தீர்வில் தேசியரீதியான(12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீடு

## பொதியேற்றும் ட்ரக் மோதியதில்

## பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின்

# தேர்தல் விஞ்ஞாபன வெளியீடு நாளைவரை ஒத்திவைப்பு!

கொழும்பு —

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று வெளியிடப்படவில்லை. நாளையே இது வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று அலரிமாளிகையில் மத வழிபாட்டுடன் வெளியிடப்பட்டு, அதன் பிரதிகள் சுதந்திரக்கட்சியின் தலைவர்களுக்கும் மற்றும் கூட்டணிக்கட்சிப் பிரமுகர்களுக்கும் வழங்க முடிவு செய்யப்பட்டிருந்தது.

அதற்கேற்ப கொழும்பில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடு ஒன்றில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரின் பேச்சாளரான அமைச்சர் மங்கள சமரவீரவும் நேற்றைய தினம் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்படும் என (12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதியேற்றும் ட்ரக் மோதியதில் பயணி ஒருவர் பலி; 5 பேர் காயம்!

## கட்டுநாயக்க விமானநிலையத்தில் சம்பவம்

கொழும்பு —

கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் - கோலாலம்பூரிலிருந்து வந்த விமானத்திலிருந்து பயணிகள் இறங்கிக்கொண்டிருந்தபோது விமான நிலைய ட்ரக் மோதியதில் இந்தோனேஷியப் பெண் ஒருவர் பலியானார். மேலும் 5 பயணிகள் படுகாயமடைந்தனர்.

நேற்றுக்காலை 10.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கோலாலம்பூரிலிருந்து வந்த யு.எல்.316 இலக்க விமானத்திலிருந்து பயணிகள் தரையிறங்கிக்கொண்டிருந்தபோது விமானப்படிக்கட்டின் மீது ட்ரக் மோதியது.

இதனால் 6 பயணிகள் மேலிருந்து கீழே தூக்கி வீசப்பட்டனர். படுகாயமடைந்த இவர்கள் உடனடியாக நீர்கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் (12 ஆம் பக்கம் பார்க்க)

# நு.ஆ எம்.பிக்கள் நால்வர் ஐ.தே.கவுக்கு மாறத் திட்டம்!

கொழும்பு —

தேசிய ஐக்கிய முன்னணி (நு ஆ) நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையப்போவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்துள்ள தேசிய ஐக்கிய முன்னணியின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவுள்ளனர். இவர்கள் 2002ஆம் ஆண்டு தேர்தலின் பின்னர் முஸ்லிம் காங்கிரஸிலிருந்து விலகி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து கொண்டனர்.

தற்போது ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துகொள்வதற்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் (12 ஆம் பக்கம் பார்க்க)

# கொள்ளுப்பிட்டி பள்ளிவாசல் அருகே திடீரென முளைத்துள்ள புத்தர் சிலை!

## இனமோதலாக உருவெடுக்கும் ஆபத்து

கொழும்பு —

கொள்ளுப்பிட்டியில் முஸ்லிம்களின் பள்ளிவாசலுக்கு அருகே - திடீரென அமைக்கப்பட்டிருக்கும் புத்தர் சிலையை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் - இல்லையேல் இது இனமோதலாக உருவெடுக்கும் என்றும் அமைச்சர் எ.எச்.எம். பௌசி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எ.எச்.எம்.பௌசி கூறுகையில் -

கொள்ளுப்பிட்டியில் முஸ்லிம்களின் பள்ளிவாசலில் இருந்து 50 மீற்றர் தூரத்தில் திடீரென புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது. அது அந்தப் பகுதியில் இனமோதல்களை ஏற்படுத்தக்கூடும்.

இது தொடர்பாக கொழும்பு மேயர் பிரச்சன்ன குணவர்த்தனவிடம் தனிப்பட்ட முறையிலும் வேண்டுகோள் விடுத்திருந்தேன். ஆனால், அந்தப் புத்தர் சிலை அகற்றப்படவில்லை. இது விடயத்தில் முஸ்லிம் மக்கள் மிகவும் கோபத்தில் உள்ளனர் எனத் தெரிவித்தார்.

இந்தத் திடீர் புத்தர்சிலையை அகற்ற வலியுறுத்தி, மூன்று வாரங்களுக்கு முன்னர் பிரதமர் இல்லம் நோக்கி (12 ஆம் பக்கம் பார்க்க)

# ரணிலுடன் பகிரங்க விவாதம்; மகிந்த முன்வரவேண்டுமாம்!

## அமைச்சர் டி.எம்.ஜயரட்ண

கொழும்பு —

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பை ஏற்று - அவருடன் நேரடி விவாதம் நடத்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ முன்வரவேண்டும் என அமைச்சர் டி.எம்.ஜயரட்ண வலியுறுத்திக் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக டி.எம்.ஜயரட்ண கருத்து வெளியிடுகையில் -

கணினிக் கொள்வனவு மோசடி தொடர்பாக மகிந்த ராஜபக்ஷவுடன் விவாதிக்கத் தயாராக இருப்பதாக ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் தெரிவித் (12 ஆம் பக்கம் பார்க்க)

# பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு நடத்திய சிறுவர்தின, கட்டுரை, கவிதை போட்டி முடிவுகள்

பருத்தித்துறை

சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவால் நடத்தப்பட்ட கட்டுரை, கவிதைப் போட்டி முடிவுகள் வருமாறு -

**சர்வதேச சிறுவர் தினம்-2005**

***கட்டுரைப் போட்டிகள்***

***கீழ் பிரிவு***

***தரம் 6 - 8***

முதலாமிடம் - வினோதா பரமானந்தம் (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), இரண்டாமிடம் - கௌதமி கங்காதரன் (மெதடிஸ்த பெண்கள்உயர்தரப்பாடசாலை), மூன்றாமிடம் - வல்லிபுரநாதன் சுஜீவன் (ஹாட்லிக் கல்லூரி).

***மத்திய பிரிவு***

***தரம் 9 - 11***

முதலாமிடம் - தர்சினி குணச்சந்திரன்(மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), இரண்டாமிடம் - நிருஷணி நல்லதம்பி (வட. இந்து மகளிர் கல்லூரி), மூன்றாமிடம் - பாகினி சிவசுவாமி (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை).

***மேற் பிரிவு***

***தரம் 12 - 13***

முதலாமிடம் - சிவரூபி சிவயோகன் (வட. இந்து மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் - கோகிலவாணி இரத்தினசபாபதிக்குருக்கள் (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), மூன்றாமிடம் - வதன ரேகா நந்தகோபாலன் (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை).

***கவிதைப் போட்டிகள்***

***கீழ் பிரிவு***

***தரம் 6 - 8***

முதலாமிடம் - வினோ தங்கவேல் (சிதம்பரக் கல்லூரி), இரண்டாமிடம் - தனுஷியா இந்திரதாஸ் (வல்வை. சிவகுரு வித்தியாலயம்), மூன்றாமிடம் - சிறிபவன் சரத்பவன் (ஹாட்லிக் கல்லூரி).

***மத்திய பிரிவு***

***தரம் 9 - 11***

முதலாமிடம் - சத்தியகல்யாணி சரவணபவான் (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), இரண்டாமிடம் - சிந்துஜா கருணாநிதிரஞ்சன் (வட. இந்து மகளிர் கல்லூரி), மூன்றாமிடம் - ஜீவிதா தயாநிதிவேல் (வல்லை. மகளிர் மகாவித்தியாலயம்).

***மேற் பிரிவு***

***தரம் 12 - 13***

முதலாமிடம் - கலைமகள் கதிரவேல் (வல்வை. மகளிர் மகாவித்தியாலயம்), இரண்டாமிடம் - கேதீஸ்வரி சக்திவேல் (வட. இந்து மகளிர் கல்லூரி), மூன்றாமிடம் - சுகன்யா செல்வானந்தன் (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை).

**சர்வதேச முதியோர் தினம் - 2005**

***கட்டுரைப் போட்டிகள்***

***கீழ் பிரிவு***

***தரம் 6 - 8***

முதலாமிடம் - கிருஜிகா கணபதிப்பிள்ளை (பொலிகண்டி இ.த.க. பாடசாலை), இரண்டாமிடம் - சங்கீதா நவரட்ணசாமி (பொலிகண்டி இ.த.க. பாடசாலை), மூன்றாமிடம் - ரேணுஜா இரட்ணபாலன் (சிதம்பரக் கல்லூரி).

***மத்திய பிரிவு***

***தரம் 9 - 11***

முதலாமிடம் - நிறோஜினி சர்வேஸ்வரன் (வட.இந்து மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் - பானுமதி நவரட்ணசாமி (பொலிகண்டி இ.த.க. பாடசாலை), மூன்றாமிடம் - கோமதி திருலோகநாதன் (வட. இந்து மகளிர் கல்லூரி).

***மேற் பிரிவு***

***தரம் 12 - 13***

முதலாமிடம் - தமிழினி தயாளன் (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), இரண்டாமிடம் - வராகினி சிவனேசசுந்தரம் (சிதம்பரக் கல்லூரி), மூன்றாமிடம் - கஜந்தினி ஜெகதீஸ்வரன் (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை).

***கவிதைப் போட்டிகள்***

***கீழ் பிரிவு***

***தரம் 6 - 8***

முதலாமிடம் - ஜெயதர்சினி முருகேசு (தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), இரண்டாமிடம் - அனோஜா தனராசா (கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை), மூன்றாமிடம் - அகல்யா ஆறுமுகநாதன் (கொற்றாவத்தை அ.மி. த.க. பாடசாலை).

***மத்திய பிரிவு***

***தரம் 9 - 11***

முதலாமிடம் - கிருஷாணி பாலச்சந்திரன் (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), இரண்டாமிடம் - கௌதமி முருகுப்பிள்ளை (சிதம்பரக் கல்லூரி), மூன்றாமிடம் - றஜீனா தங்கவேல் (கொற்றாவத்தை அ.மி. த.க. பாடசாலை).

***மேற் பிரிவு***

***தரம் 12 - 13***

முதலாமிடம் - ஸ்ரீவாசுகி சரவணபகவான் (சிதம்பரக் கல்லூரி), இரண்டாமிடம் - நித்தியா தேவதாஸ் (சிதம்பரக் கல்லூரி), மூன்றாமிடம் - கங்காதரன் கௌசிகன் (ஹாட்லிக் கல்லூரி). (14)

# கடைத்தொகுதிகளின் கூரை பிரித்து பணம், விற்பனைப் பொருள் திருட்டு!

சங்கானை

நான்கு கடைத்தொகுதிகளைக் கொண்ட கடைகளின் கூரைத், தகடுகளைக் கழற்றி உள்ளிறங்கிய திருடர்களால் பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் சங்கானை மாலியவத்தை வீதியில் அமைந்துள்ள கடைகளில் கடந்த 10 ஆம் திகதி இரவு வேளையில் இடம்பெற்றது.

இந்தக் கடைத் தொகுதியில் விவசாயக் களஞ்சியக் கடையில் மேசை லாச்சிக்குள் வைக்கப்பட்டிருந்த ரூபா 8500 ரொக்கமும், 30 லீற்றர் பெற்றோலும், வேறு சில விவசாய தேவைக்குரிய மருந்து வகைகளும் திருடப்பட்டுள்ளன. மற்றுமோர் சலவைத் தொழிலகத்தில் சலவை செய்துவைக்கப்பட்டிருந்த உடுப்பு வகைகளும், ரொக்கம் 2500ரூபாவும், வானொலி ஒன்றும் களவு போயுள்ளன. இதேவேளை, அருகில் உள்ள வீடியோ கடையினுள் இறங்குவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு, அது கைகூடாத நிலையில் திருடர்கள் சென்றுள்ளனர்.

இந்தக் களவு சம்பந்தமாக சங்கானை, மானிப்பாய் பொலிஸில் முறையிட்டதைத் தொடர்ந்து அவர்கள் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணையை மேற்கொண்டனர். (48)

# தமிழ் செய்தி தகவல் மையம் நேற்று திறந்துவைக்கப்பட்டது




யாழ்ப்பாணம்

தமிழ் செய்தி தகவல் மையம் நேற்றுக் காலை 11 மணிக்கு இலக்கம் 180, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் திறந்து வைக்கப்பட்டது.

அலுவலகத்தின் பெயர்ப்பலகையை பேராசிரியர் சண்முகலிங்கன் திரை நீக்கம் செய்துவைத்தார். மூத்த பத்திரிகையாளர் கோபாலரட்ணம் (கோபு) நாடாவை வெட்டி அலுவலகத்தைத் திறந்து வைத்தார். மங்கள விளக்கை பேராசிரியர் சண்முகலிங்கன், பேராசிரியர் சிவநாதன், மூத்த பத்திரிகையாளர் கோபு, முன்னாள் யாழ். பிரதேச மின் அத்தியட்சகர் கணநாதன், சட்ட விரிவுரையாளர் பொன். பூலோகசிங்கம், ராசாடீசல் உரிமையாளர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழ் செய்தி தகவல் மையத்தை சேர்ந்த ஐங்கரன் வரவேற்புரை வழங்கி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். தமிழ் செய்தி தகவல் மையத்தின் இணையத்தை சட்ட விரிவுரையாளர் பொன். பூலோகசிங்கம் திறந்து வைத்தார். தொடர்ந்து சிறப்புரைகளை பேராசிரியர் சிவநாதன், பேராசிரியர் சண்முகலிங்கன், மூத்த பத்திரிகையாளர் கோபாலரட்ணம் (கோபு), சட்ட விரிவுரையாளர் பொன். பூலோகசிங்கம், நமது ஈழநாடு பத்திரிகையின் நிர்வாக இயக்குனர் சிவமகாராசா, றோயல் இன்ஸ்ரிரியுட்டை சேர்ந்த புரந்தரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

# நூலகக் கண்காட்சியும் புத்தக விற்பனையும்

சாவகச்சேரி

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகரசபைப் பொது நூலகத்தால் நாளையும், நாளை மறுதினமும் நூலகக் கண்காட்சியும், புத்தக விற்பனையும் இடம்பெறவுள்ளது.

இதேவேளை -

நூலக வாசிப்பு மாதத்தை முன்னிட்டு தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையால் ஒரு தொகுதி நூல்கள் சிறுவரின் அறிவு மேம்படத்தக்க புத்தகங்கள் உட்பட சாவகச்சேரி நகர சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. (29)

# முன்பள்ளி விளையாட்டு விழா!

பொன்னாலை

பொன்னாலை பாபுஜி முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்த விளையாட்டு விழா இன்று பி.ப 2.30 மணியளவில் பாபுஜி முன்பள்ளி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. பொன்னாலை மாதர் சங்கத்தலைவி ந.கமலாதேவி தலைமையில் நடைபெறவுள்ள இந்த விளையாட்டு விழாவில் பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலையின் அதிபரும், வடமாகாண பெண் சாரணிய ஆணையாளருமான திருமதி சிவராசா கிருபாசக்தி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (207)

# வெளியிணைப்பு இயந்திரங்கள் வழங்கல்

வேலணை

சுழற்சிக் கடன் திட்டத்தின் கீழ் யூ.என்.டி.பி நிறுவனம் மண்டைதீவு, வேலணை துறையூர், நயினாதீவு வடக்கு, செட்டியபுலம் ஆகிய நான்கு மீனவ சங்கங்களுக்கும் வெளியிணைப்பு இயந்திரங்களை வழங்கவுள்ளது.

பயன்பெறும் அங்கத்தவர்கள் தாங்கள் கோருகின்ற இயந்திரத்தை பெறுவதற்கு யூ.என்.டி.பி நிறுவனத்தால் வழங்கப்படும் ஒரு லட்சம் ரூபாவுக்கு மேலதிகமான தொகையை அங்கத்துவ சங்கங்கள் ஊடாக சம்மேளனத்துக்கு செலுத்தவேண்டுமெனவும் -

யூ.என்.டி.பி நிறுவனத்தால் வழங்கப்படும் கடன்தொகை ஒரு லட்சம் ரூபாவையும் பயனாளிகள் தவணை அடிப்படையில் அந்தந்த சங்களுக்கு மீளச் செலுத்த வேண்டும் எனவும் -

இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் இயந்திரங்கள் யாவும் யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவு சமாசங்களின் சம்மேளனத்தால் கொள்வனவு செய்து வழங்கப்பட வேண்டுமெனவும் சம்பந்தப்பட்ட சங்கங்களுக்கு யாழ்ப்பாணம் கடற்தொழில் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (21)

# வீதி புனரமைப்பிற்கு நிதி ஒதுக்கீடு

வடமராட்சி

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் 4கிலோ மீற்றர் நீளமான மருதங்கேணி, ஆழியவளை வீதி அமைப்பதற்கு நிகொட் நிதி உதவித்திட்டத்தின் கீழ் 25 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக இவ்வீதி புனரமைக்கப் படாமையால் வாகனங்கள், பொது மக்கள் வெகுசிரமத்தின் மத்தியிலேயே இந்த வீதியால் போக்குவரத்தை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (21)






# தமிழ்ப்பற்றாளர்கள் மீதுநடத்தப்படும் தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டும்!

## யாழ்.மாவட்ட பொது அமைப்புகள் ஒன்றியம்

யாழ்ப்பாணம்

தமிழரது வாழ்வுரிமைக்காகப் போராடும் தமிழ்ப் பற்றாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவது நிறுத்தப்படவேண்டுமென்பதுடன், 24 மணிநேர இடைவெளிக்குள் இரண்டு கல்விமான்கள் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதை யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் வன்மையாக கண்டிப்பதாக ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கொலைகள் மூலம் எதையும் சாதிக்கப்போவதில்லை. இவ்வாறான கொலைகளுக்கு படையினரே காரணம் என செய்திகள் வெளியாகியுள்ளன. போர் நிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பன இது போன்ற கொலைகளால் கேள்விக் குறியாகியுள்ளன. இந்தச் செயலானது மீண்டுமொரு யுத்தத்தை தமிழ்மக்கள் மீது திணிக்கின்ற செயலாகவே நாம் கருதுகின்றோம். தமிழரது வாழ்வுரிமைக்காக போராடும் தமிழ்ப்பற்றாளர்கள் மீது தாக்குதல் நடத்துவது நிறுத்தப்பட வேண்டும். மீறின் மீண்டுமொரு இரத்தக் களரி ஏற்படுவது தவிர்க்க முடியாததொன்றாகிவிடும்.

இவ்வாறான கொலைகள் தமிழ்த்தேசியத்தை இன்னும் வீச்சாக்கும். சிறந்த கல்விமான்களாகவும், தேசத்துக்காக உழைப்பவர்களாகவும் தங்களை வரித்துக் கொண்டவர்கள். இவர்களது கொலை தமிழ் மக்களை ஆத்திரம் கொள்ளவைத்திருக்கிறது. சகல மாணவர்களையும் கொதிப்படைய வைத்துள்ளது.

கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி அதிபர் ந.சிவகடாட்சம் சிறந்த கல்விமானாகவும், தேசப்பற்றுள்ளவராகவும் திகழ்ந்தார். பொது வாழ்வில் தூய்மையைக்கடைப்பிடித்து தான் சார்ந்திருந்த அமைப்புக்களின் வளர்ச்சிக்காக பாடுபட்டார். இதேவேளை, கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரிக்கும், மாணவர் சமூகத்தின் கல்வி உயர்வுக்கும் பாடுபட்டார்.

யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை கல்வி வளர்ச்சிக்காக முழுமையாக தனது வாழ்வை அர்ப்பணித்தார்.

இந்த கல்விமான்களின் கொலை எமது நாட்டிற்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். எனவே, இந்தக் கொலைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உயர் தொழில் நுட்ப நிறுவன மாணவர்கள் விண்ணப்பிக்குக

மீசாலை

உயர் தொழில் நுட்ப நிறுவனத்தின் சகல கற்கைநெறி மாணவர்களும் தமது இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை விண்ணப்பங்களை எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு உயர்தொழில்நுட்ப நிறுவன இயக்குனர் இராஜரட்ணம் கேட்டுள்ளார்.

நிறுவனத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரத்தில் விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்தி செய்து கையளிக்குமாறும், இந்த விண்ணப்பங்கள் சகல கற்கை நெறி மாணவர்களும் பூர்த்தி செய்து வழங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (25)

# சாரமரத்திலிருந்து தவறிவீழ்ந்து காயம்!

யாழ்ப்பாணம்

சாரை மரத்திலிருந்து தவறி வீழ்ந்து கையில் படுகாயமடைந்த நிலையில் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உரும்பிராயைச் சேர்ந்த றொபின்சன் (வயது24) என்பவரே காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.


"வாசியுங்கள் அகவிழி திறக்கும்"

வாசிப்போம் வாசித்ததை யோசிப்போம்

ஆசிரியர்களுக்கான மாத இதழ்
அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு...

AHAVILI,3,
Torrington Avenue,
Colombo - 7,
Sri Lanka.

(C/4683)

T.P. 011-2506272, E-Mail:ahavili@viluthu.org

# வேட்பாளர்களைக் குறிவைத்து பெருமளவு புலிகள் ஊடுருவலாம்!

## படைத்தரப்பு தெரிவிப்பு

கொழும்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களை கொலை செய்யும் நோக்குடன் விடுதலைப் புலிகளின் பெருமளவு உறுப்பினர்கள் கொழும்பு மற்றும் பிற பகுதிகளில் வந்து தங்கியிருப்பதாக தகவல்கள் கிடைத்தும், அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை பாதுகாப்புக்கு மிகவும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாக படைத்தரப்பு தெரிவித்தது.

பொலிஸ் மற்றும் இராணுவம் ஒருங்கிணைந்து கொழும்பு மற்றும் பிறபகுதிகளில் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டாலும், அவை உரிய செயற்திட்டத்தின டிப்படையில் மேற்கொள்ளப்படுவதில்லையென சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சோதனை நடவடிக்கைகள் உரிய முறையில் செயற்படுத்தப்படாமையால், கொழும்புக்கு வந்துள்ள விடுதலைப்புலிகள் தமது விருப்புக்கேற்ற வகையில் நடமாடி தமக்குரிய தகவல்களைத் திரட்டி வருகின்றனர்.

விடுதலைப்புலிகளைக் கைது செய்யும் நடவடிக்கை முழுமையான வகையில் தொடர்ச்சியாக நிகழுமானால், அவர்கள் கொழும்பில் தங்கியிருக்க அச்சமடைவர். இதன்மூலம் அவர்களின் செயற்பாடுகளைக் குறைக்க முடியும்.

கொழும்புக்கு வந்துள்ள விடுதலைப்புலிகளில் பெருமளவானோர் தமிழ் வர்த்தகர்களுக்குச் சொந்தமான தோட்டங்களில் சிற்றூழியர்களாகப் பணியாற்றுவதாகவும், வேறு சிலர் பிறபணிகளில் ஈடுபட்டுள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

பாதுகாப்பு குறித்து எழுந்துள்ள இந்தப் பிரச்சினைக்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளாதவிடத்து பாரதூரமான நிலைமையை எதிர்நோக்க வேண்டிவருமெனவும் அவர் தெரிவித்தார். (தே)

# திருமலையில் நாளை பாடசாலைகள் பகிஷ்கரிப்பு

திருகோணமலை

யாழ்.பாடசாலைகளின் இரு அதிபர்கள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து திருகோணமலை பாடசாலைகளில் நாளை பகிஷ்கரிப்பு போராட்டம் நடைபெறவுள்ளது.


இதற்கான அழைப்பை திருகோணமலை தமிழ் மக்கள் பேரவை விடுத்துள்ளது. தமிழ் மக்கள் பேரவையின் அறிக்கையில் -

இந்தக் கொலைகள் ஆசிரிய சமூகத்திற்கு விடுக்கப்பட்டுள்ள மிகப்பெரிய அச்சுறுத்தல். இத்தகைய கொலைகளை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. எனவே இந்தச் செயல்களைக் கண்டித்து திருகோணமலை மாவட்டத்தின் சகல பாடசாலைகளையும் நாளை மூடி ஆசிரியர்களும், மாணவர்களும் பாடசாலைகளை முற்றாக பகிஷ்கரித்து எமது கண்டனத்தையும் துயரையும் வெளிப்படுத்துவோம்.

அன்று சகல கேளிக்கை நிகழ்வுகளையும் தவிர்க்குமாறும் வேண்டுகிறோம் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

# தேர்தல் முடிவுகள் வெளிவரமுன்னரே சோமவன்ச நாட்டைவிட்டு ஓடுவார்!

## அடித்துச் சொல்கிறார் அனுரா



கொழும்பு

இராணுவத்தைக் கலைத்து விடுமாறு வீரரைப் போன்று கருத்துக்களைக் கூறுபவர்கள் தேர்தல் முடிவுகள் வெளிவருவதற்கு முன்னரே நாட்டைவிட்டு வெளியேற வேண்டிய நிலை கட்டாயமாக ஏற்படும் என்று வெளிவிவகார அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அனுரா பண்டார நாயக்க தெரிவிக்கையில் -

இராணுவத்தைக் கலைத்து விடுமாறு ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச கூறியிருக்கும் கருத்துக்கள் வன்மையாகக் கண்டிக்கத்தக்கவையாகும். இராணுவத்தைக் கலைத்துவிடுமாறு வீரரைப் போன்று கருத்துக்களைக் கூறுபவர்கள் தேர்தல் முடிவுகள் வெளிவருவதற்கு முன்னரே நாட்டைவிட்டு வெளியேற வேண்டிய நிலை கட்டாயமாக ஏற்படும்.

மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் அறிக்கையில் அடங்கியிருக்கும் அனைத்துவிடயங்களும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கைகளுடன் நூற்றிற்கு நூறு வீதம் ஒத்துப்போகவேண்டும். வேட்பாளரென்ற வகையில் ஏனைய கட்சிகளுடன் உடன்படிக்கையை ஏற்படுத்தும் உரிமை அவருக்கு உள்ளது. எனினும் கட்சியின் கொள்கைகளை காட்டிக் கொடுக்கும் உரிமை அவருக்குக் கிடையாது.

ஒவ்வொரு கட்சியுடனும் உடன்படிக்கை செய்துகொண்டதன் பலன் என்ன என்பதை நவம்பர் மாதம் 18 ஆம் திகதியளவில் மகிந்த ராஜபக்ஷவினால் அறிந்துகொள்ள முடியும் என அனுரா பண்டாரநாயக்க மேலும் தெரிவித்தார்.

# மனித உரிமை அலுவலக தீ வைப்பு; விசாரணை நடத்தக் கோரிக்கை!

கொழும்பு

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தின் ஆவணங்களைத் தீவைத்து அழிக்க முயன்ற சம்பவம் தொடர்பாக உரிய விசாரணைகளை ஆரம்பிக்குமாறு ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பு கிங்ஸ்லி வீதியில் உள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தின் ஆவணப்பிரிவிலுள்ள முக்கிய ஆவணங்கள் சிலவற்றைச் சிலர் கடந்த 12ஆம் திகதி இரவு தீயிட்டு எரிக்க முயற்சித்துள்ளனர்.

இவ்வாறு தீவைத்து எரிக்க முற்பட்ட ஆவணங்களில் பொலிஸாருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அடங்கிய ஆவணங்கள் அலுவலகத்தில் காணப்பட்டதாக ஆசிய மனிதஉரிமைகள் ஆணைக்குழு தெரிவித்தது.

# கைதடி காவலரண் மீது கைக்குண்டு வீச்சு!

கொழும்பு

கைதடியில் இராணுவக் காவலரண் மீது நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் இனந்தெரியாதோரால் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாக படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

காவலரண் மீது வீசப்பட்ட கைக்குண்டு வெடிக்காததால் எவ்வித சேதங்களும் ஏற்படவில்லையென்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மின்சார சபை ஊழியர்களுக்கு அறுபது கோடி ரூபா போனஸ்!

கொழும்பு

இலங்கை மின்சாரசபை ஊழியர்களுக்கு அறுபது கோடி ரூபா போனஸ் வழங்கப்படவுள்ளது.

வருடாந்த போனஸ் கொடுப்பனவாக 30 கோடி ரூபாவையும், சுகவீன விடுமுறைகளைப் பெற்றுக்கொள்ளாமைக்காக மேலும் 30 கோடி ரூபாவையும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாத சம்பளத்துடன் 2003 ஆம் ஆண்டுக்கான சம்பள அதிகரிப்பு நிலுவைப் பணத்தையும் சேர்த்து ஒரு ஊழியருக்கு 20 ஆயிரம் ரூபா என்ற வகையில் அனைத்து ஊழியர்களுக்கும் 27 கோடி ரூபாவை மின்சாரசபை செலுத்தியிருப்பதாகவும், மின்சார சபை வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

அரச வங்கிகளுக்கும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கும், தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களுக்கும் 1301 கோடி ரூபாவை கடனாகச் செலுத்த வேண்டியிருக்கும் நிலையிலேயே தனது ஊழியர்களுக்கு 60 கோடி ரூபாவை போனஸாக வழங்க மின்சாரசபை தயாராகிறது.

மின்சார சபை அரச வங்கிகளுக்கு 920 கோடி ரூபாவையும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு 354 கோடி ரூபாவையும், தனியார் மின்னுற்பத்தி நிறுவனங்களுக்கு 27 கோடி ரூபாவையும் செலுத்த வேண்டியுள்ளதாக மின்சார சபையின் அதிகாரி ஒருவர் கூறினார்.

மின் பாவனையாளர்கள் ஒரு நாளைக்கு 1 கோடி 50 லட்ச மின் அலகுகளைப் பயன்படுத்துவதாகவும், தற்போது அந்த ஒவ்வொரு அலகிற்கும் சபைக்கு 3 ரூபா நட்டம் ஏற்படுவதாகவும், இதற்கமைய மின் விற்பனையால் ஒரு நாளைக்கு மின்சார சபைக்கு 4 கோடி 5 லட்ச ரூபா நட்டம் ஏற்படுவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

# அரசியல்சார் நியமனங்கள் ரத்துச் செய்யப்படுமாம்!

## ஐ.தே.க. அறிவிப்பு

கொழும்பு

கடந்த ஏழாம் திகதிக்குப் பின்னர் அரசாங்க சேவையில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து நியமனங்களையும் ரத்துச் செய்ய ஐ.தே.க நடவடிக்கை எடுக்கும் என கட்சியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய அவர் -

தற்போது அரசு அவசர அவசரமாக பெருமளவானோருக்கு நியமனங்களை வழங்கி வருகிறது. தேர்தல் சட்டத்தின்படி அவை செல்லுபடியற்றவை. நியமனப் பத்திரம் தாக்கல் செய்த திகதிக்குப் பிந்திய அனைத்து நியமனங்களுமே அரசியல் சார்ந்துள்ளதால் அவை ஐ.தே.க ஆட்சியில் ரத்துச்செய்யப்படும் எனத் தெரிவித்தார்.

# வெளிநாடு சென்றுள்ள 15 லட்சம் வாக்காளர்கள்!

கொழும்பு

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்ற வாக்காளர்களில் ஒன்பதில் ஒரு பங்கு வாக்காளர்கள் வேலை வாய்ப்புகளுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

எதிர்வரும் தேர்தலில் வாக்களிக்கத் தகுதிபெற்ற ஒரு கோடி 33 லட்சம் வாக்காளர்களில் 15 லட்ச வாக்காளர்கள் தொழில் வாய்ப்புகளுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர்கள் சங்கத்தின் தலைவர் சுராஜ் தந்தெனிய தெரிவித்தார்.

வெளிநாட்டிலுள்ள வாக்காளர்களின் வாக்குகளை எதிர்வரும் தேர்தலில் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இந்த வாக்குகள் பயன் படுத்தப்படாமல் போனால், அவை கள்ள வாக்குகளாகப் பயன்படுத்தக் கூடிய நிலை ஏற்படலாம்.

தமது நாட்டு குடிமக்கள் வேலை வாய்ப்புகளுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கையில் - பிலிப்பைன்ஸில் நடைபெறும் எந்தவொரு தேர்தலின் போதும் வெளிநாடுகளிலிருக்கும் அந்நாட்டு மக்கள், வசிக்கும் நாடுகளில் இருக்கும் தமது தூதரகங்களுக்குச் சென்று அந்த மக்கள் வாக்களிக்கக் கூடிய வகையிலான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இலங்கையும் அந்த வழியைப் பின்பற்றலாம்.

அது சாத்தியமில்லையெனில் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு செல்பவர்களுக்காக தபால் மூல வாக்களிப்பு வசதியையாவது செய்யலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## மனித உரிமை கண்காணிப்புக்குழு:

# இயன் மார்ட்டின் யோசனையை தமிழ்க் கூட்டமைப்பு நிராகரிப்பு!

கொழும்பு

சமாதானப் பேச்சுக்கள் மீளத் தொடங்கப் படும்வரை - மனித உரிமை மீறல்களைக் கண்காணிப்பதற்கான குழுவொன்றை அமைக்க இயன் மார்ட்டின் முன்வைத்த யோசனையை தமிழ் தேசியக் கூட்டமைப்பு நிராகரித்துள்ளது.

சர்வதேச மனித உரிமை ஆலோசகர் இயன் மார்ட்டினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்துப் பேச்சு நடத்தினர். இந்தச் சந்திப்பின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் - கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் குறித்தும், இதே மனித உரிமை மீறல்கள் தற்போது வடமாகாணத்திற்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டினார்.

1990ஆம் ஆண்டு ஜுன் மாதத்துக்குப் பின்னர் மட்டக்களப்பில் 7 ஆயிரத்துக்கும் அதிகமானோர் காணாமற்போயுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் நடைபெற்று 15 ஆண்டுகாலம் ஆகியும் இந்த விடயங்களில் எதுவித நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தற்போது மீண்டும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓராண்டு காலமாக மனித உரிமை மீறல்கள் அதிகரித்துள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள், பொதுமக்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் என பல தரப்பினரும் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில்தான் கொல்லப்பட்டு வருகின்றனர். இவற்றைக் கட்டுப்படுத்தவேண்டியது அரசின் பொறுப்புத்தான். எனவே, இந்தக் கொலைகளைத் தடுத்து நிறுத்துமாறு அரசிடம் வலியுறுத்துமாறு கேட்டுக் கொண்டனர்.

இதற்குப் பதிலளித்த இயன் மார்ட்டின் - முன்னைய அமைதிப் பேச்சுக்களின்போது ஹக்கோனே மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட முடிவின்படி இரு பகுதிகளிலும் மனித உரிமை மீறல்களைச் செய்யாது, இரு தரப்பினரும் செயற்படவேண்டுமென்றும் கூறியதுடன், சர்வதேச அங்கத்தவர்களைக் கொண்ட மனித உரிமை மீறல் கண்காணிப்புக்குழுஅமைக்கப்படுவது தொடர்பான யோசனையையும் முன்வைத்தனர்.

தற்போது பேச்சுவார்த்தைகள் முடங்கியுள்ளன. சுனாமி பொதுக் கட்டமைப்புகூட தடை செய்யப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக அலகும் தடைப்பட்டுள்ளது. இந்த நிலையிலும்கூட இருதரப்பினரும் பங்கேற்றுப் பேசுவதற்கான நடுநிலையான இடத்தையும் அரசாங்கம் பரிந்துரைக்கவில்லை.

எனவே, பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும்போதுதான், இத்தகைய சர்வதேச கண்காணிப்புக் குழு போன்ற விடயங்களைத் தெளிவுபடுத்தலாமே தவிர, கண்காணிப்புக்குழு என்ற யோசனையைத் தற்போது வரவேற்கவில்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேலும் தெரிவித்தனர்.

# அவுஸ்ரேலிய அணியை வெற்றிகொள்ள 354 ஓட்டங்கள் உலக அணிக்கு இலக்கு!



விளையாட்டு

சிட்னி

சுப்பர் சீரிஸ் டெஸ்ட் தொடரின் மூன்றாம் நாள் ஆட்டத்தில் அவுஸ்ரேலிய அணி இரண்டாவது இனிங்ஸில் 199 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தது.

முதல் இனிங்ஸில் 345 ஓட்டங்களைப் பெற்ற அவுஸ்ரேலிய அணி - இரண்டாவது இனிங்ஸில் நேற்றுமுன்தினம் இரண்டாவது

JOHNNIE WALKER SUPER SERIES AUSTRALIA 2005

நாள் ஆட்டநேரமுடிவில் 1 விக்கெட் இழப்புக்கு 66 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்று மூன்றாம் நாள் ஆட்டம் தொடங்கியதுமே, ஹைடனும் பொண்டிங்கும் தொடர்ந்து நிதானமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர்.





இருவரும் அரைச்சதத்தைக் கடந்து ஆடியதன் மூலமே அவுஸ்ரேலிய அணியை ஓரளவுக்கு காப்பாற்றினர். ஸ்கோர் 152ஐ எட்டியபோது - ஹைடனின் விக்கெட்டை ஹார்மிசன் வீழ்த்தினார்.

இவர் 120 பந்துகளில் 9 பவுண்டரிகளுடன் 77 ஓட்டங்களை எடுத்தார். இவரையடுத்து கிளார்க் களமிறங்கினார். ஆனால், 5 ஓட்டங்களை மட்டுமே எடுத்திருந்தநிலையில் - ஸ்கோர் 160ஆக இருந்தபோது - இவர் ஹார்மிசனின் பந்துவீச்சில் போல்டாகி பவிலியன் திரும்பினார்.

இதேவேளை, பொண்டிங்கும் ஸ்கோர் 167ஆக இருந்தபோது, பிளின்ரொப்பின் பந்துவீச்சில் பௌச்சரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இவர் 111 பந்துகளில் 4 பவுண்டரிகளுடன் 54 ஓட்டங்களை எடுத்தார்.


22 பந்துகளை வீணடித்து 2 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்த கடிச்சும் - அதே ஸ்கோரில் முரளிதரனின் பந்துவீச்சில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து ஸ்கோர் 170ஆக இருந்தபோது, கில்கிறிஸ்ட் ஒரே ஒரு ஓட்டத்துடன் முரளிதரனின் பந்துவீச்சில் கலிஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அணியின் ஸ்கோர் 172ஆக உயர்ந்தபோது - பிளின்ரொப்பின் பந்துவீச்சில் ராவிட்டிடம் பிடிகொடுத்து வோன் ஆட்டமிழந்தார். இவர் 19 பந்துகளில் 7 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து பிளின்ரொப்பின் பந்துவீச்சில் பௌச்சரிடம் பிடிகொடுத்து வற்சன் ஆட்டமிழந்தார். 37 பந்துகளில் இவர் எடுத்த ஓட்டங்கள் 10 ஆகும்.

199 ஓட்டங்களுக்குள் அவுஸ்ரேலிய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. முரளிதரனின் பந்துவீச்சில் சிமித்திடம் பிடிகொடுத்து - மக்ரா 2 ஓட்டங்களுடனும், ஹார்மிசனின் பந்துவீச்சில் முரளிதரனிடம் பிடிகொடுத்து லீ 3




ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.


பந்துவீச்சில் பிளின்ரொப் 3, ஹார்மிசன் 3, முரளிதரன் 3, கலிஸ் 1 விக்கெட்டை வீழ்த்தினர்.

அடுத்து 354 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் உலக லெவன் அணி களமிறங்கியது. முதல் ஓவரில் மக்ராவின் நான்கு பந்துகளைச் சமாளித்த சிமித் - ஐந்தாவது பந்தில் போல்டானார்.

அணி சார்பில் ஓட்டம் எதுவும் பெறப்படாத நிலையில் சிமித் டக் அவுட்டாக - ஷேவாக்குடன் ராவிட் இணைந்தார். ஆயினும் ஸ்கோர் 18ஆக இருந்தபோது ஷேவாக் 7 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். இதில் ஒரு சிக்ஸர் அடங்கும்.

8 ஓவர்களுடன் நேற்றைய ஆட்டம் நிறுத்தப்பட்டபோது, உலக லெவன் அணி 2 விக்கெட் இழப்புக்கு 25 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ராவிட் 26 பந்துகளில் 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.





## சர்வதேச உதைபந்தாட்ட விருது தெரிவுப்பட்டியலில் 30 வீரர்கள்!



சூரிஜ்

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் சிறந்த வீரர் விருதுக்கு காகா, ரொனால்டினோ, ஸ்ரீபன் ஜெரார்ட் உட்பட 30 வீரர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர். சிறந்த வீராங்கனை விருதுக்கு 24 பேர் போட்டியில் உள்ளனர்.

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் ஆண்டுதோறும் சிறந்த வீரர்களுக்கு விருது வழங்கி கௌரவித்து வருகிறது. இந்த ஆண்டுக்கான விருதுக்கு 30 வீரர்களும், 24 வீராங்கனைகளும் கொண்ட முதற்கட்ட பட்டியல் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது. இதில் சம்பியன்ஸ் லீக் இறுதிப் போட்டியில் அபாரமாக விளையாடிய காகா, ஸ்ரீபன் ஜெரார்ட் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

கடந்த ஆண்டு இந்த விருதைப் பெற்ற ரொனால்டினோ இம்முறையும் போட்டியில் இடம்பெற்றுள்ளார். இவரைத் தவிர, டேவிட் பெக்காம் (இங்கிலாந்து), அட்ரியானோ (பிரேசில்), கிறிஸ்டியானோ ரொனால்டோ (போர்த்துக்கல்) ஆகியோரின் பெயரும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இதிலிருந்து வாக்கெடுப்பு மூலம் மூன்று வீரர்கள் எதிர்வரும் நவம்பர் அல்லது டிசம்பரில் தேர்ந்தெடுக்கப்படுவர்.


பின்னர் மூன்று பேரிலிருந்து, ஒரு வீரருக்கு விருது வழங்கப்படும். உதைபந்தாட்ட உலகின் மிக கௌரவமான விருதாகக் கருதப்படும் இந்த விருது வழங்கும் விழா எதிர்வரும் டிசம்பர் 19இல் சூரிஜ் ஒப்ரா ஹவுசில் நடைபெறும்.

வீரர்கள் பட்டியல் வருமாறு -

அட்ரியானோ, ராபர்டோ கார்லோஸ், ராபின்ஹோ, ரொனால்டினோ, ரொனால்டோ, காபு, காகா (பிரேசில்), மைக்கல் பல்லக் (ஜேர்மனி), டேவிட் பெக்காம், வெய்னி ரூனே, ஜெரார்ட், பிராக் லாம்பார்ட் (இங்கிலாந்து), ஜியான்லுகி பவன், மால்டினி, நெஸ்டா (இத்தாலி), கிறிஸ்டியானோ ரொனால்டோ, பீகோ (போர்த்துக்கல்), டையர் டிராக்பா (ஐவரிகோஸ்ட்), மைக்கல் எஸ்சியன் (கானா), இடோ (கமரூன்), ஜிடேன், தியரி ஹென்றி (பிரானஸ்), இப்ராஹி மோவிக் (சுவீடன்), நெட்விட் (செக்.குடியரசு), ஓகோசா (நைஜீரியா), ரால் (ஸ்பெயின்), ரிகுல்மி (ஆஜென்ரீனா), வான் நிஸ்டல்ராய், ரோபன் (நெதர்லாந்து), ஷிவ்சென்கோ (உக்ரைன்).

## டெல்கி பாதி மரதனில் கென்ய வீரர் முதலிடம்

புதுடெல்கி



டெல்கியில் நேற்று நடைபெற்ற சர்வதேச அரைமரதன் போட்டியில் கென்ய வீரர் முதலிடத்தைப் பெற்றார்.

கபில்தேவ், பி.ரி.உஷா, தன்ராஜ்பிள்ளை உட்பட 5 ஆயிரம் வீரர்களும், மேலும் பொதுமக்கள் உட்பட 15 ஆயிரம் பேரும் இதில் கலந்துகொண்டு ஓடினர்.

இதில் ஆண்களில் கென்ய நாட்டு வீரர் பிலிப் ரவுத் 1 மணி 1 நிமிடம் 54 வினாடிகளில் போட்டித் தூரத்தைக் கடந்து முதலிடத்தைப் பிடித்தார். துங்கன் கிபெத் 2ஆவது இடத்தையும், தான்சானியாவைச் சேர்ந்த மார்ட்டின் சுல்லா 3ஆவது இடத்தையும் பிடித்தனர்.

பெண்களில் ரஷ்யாவைச் சேர்ந்த கிரினா திமோசேயவா முதலிடத்தைப் பிடித்தார். அவர் 1 மணி 1 நிமிடம் 35 வினாடிகள் எடுத்துக் கொண்டார். 2ஆவது இடத்தை இன்கா அபிதோவாவும், 3ஆவது இடத்தை கென்ய வீராங்கனை எடித் மசாயும் பிடித்தனர்.

இதில் வெற்றிபெற்றவர்களுக்கு ஒன்றரைக் கோடி ரூபா பரிசு வழங்கப்பட்டது. மரதன் போட்டிக்கு ஆசியாவிலேயே அதிகமாக வழங்கப்படும் பரிசு இதுவாகும்.

## வோல்ஷின் சாதனையை முறியடித்தார் கிளென் மக்ரா



சிட்னி

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் முன்னணி பந்துவீச்சாளர்களில் ஒருவரான மக்ரா புதிய சாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளார்.

உலக லெவனுக்கு எதிரான நேற்றுமுன்தின ஆட்டத்தில் லாறா 5, ராவிட் 0 ஆகியோரின் விக்கெட்டுக்களை மக்ரா கைப்பற்றியதன் மூலம் மேற்கிந்திய வீரர் வோல்ஸின் சாதனையை (519 விக்கெட்டுக்கள்) முறியடித்தார்.

113 டெஸ்ட் போட்டிகளில் ஆடியுள்ள அவர், மொத்தம் 520 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளதுடன், தற்போது அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளவர்கள் பட்டியலில் 3ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

டெஸ்ட் போட்டியில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளவர்களின் பட்டியலில் அவுஸ்ரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோன் முதலிடத்தில் உள்ளார். அவர் மொத்தம் 626 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார்.

இவருக்கு அடுத்தபடியாக இலங்கை வீரர் முரளிதரன் உள்ளார். அவர் தனது பங்குக்கு 560 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

## இந்திய கிரிக்கெட் தொடர்; இலங்கை அணி அறிவிப்பு

கொழும்பு

இந்தியாவுக்கு எதிரான தொடருக்கான இலங்கை கிரிக்கெட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. வேகப்பந்து வீச்சாளர் சொய்சா அணியில் இடம் பிடித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணி எதிர்வரும் 20ஆம் திகதி முதல் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 7 ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. முதல் ஒருநாள் போட்டி எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறும். 7ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி நவம்பர் 12ஆம் திகதி நடைபெறும்.

ஒருநாள் போட்டி முடிந்ததும் இலங்கை அணி நாடு திரும்பிவிட்டு டிசம்பர் மாதத்தில் வந்து 3 டெஸ்ட் போட்டிகளில் ஆடவுள்ளது.

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடருக்கான இலங்கை அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. கப்டனாக அத்தபத்து மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். வேகப்பந்து வீச்சாளர் சொய்சா அணியில் இடம்பிடித்துள்ளார்.

மற்றபடி பங்களாதேஷுக்கு எதிரான போட்டியில் இடம்பெற்ற வீரர்கள் அணியில் இடம்பிடித்துள்ளனர். 15 பேர் கொண்ட இலங்கை அணி வீரர்கள் வருமாறு -

அத்தபத்து (கப்டன்), ஜெயவர்த்தன (துணைக் கப்டன்), ஜெயசூர்ய, சங்கஹார, திலகரத்ன டில்ஷான், உபுல் தரங்க, டில்ஷான் சமரவீர, வாஸ், உபுல் சந்தன, பர்வீஸ் மஃரூப், ஆர்னோல்ட், டில்ஹார பெர்னாண்டோ, முரளிதரன், தில்ஹார லொக்குகெட்டிகே, சொய்சா.

# பாடசாலை அதிபர்களின் கொலைக்கு தமிழ் மாணவர் ஒன்றியம் கண்டனம்!

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணத்தில் இரண்டு அதிபர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை தமிழ் மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் -

தொடர்ச்சியாக இரண்டு கல்விமான்களைச் சுட்டுக் கொன்ற இராணுவமும் தேசவிரோதக் கும்பல்களும் இன்று பொய்ப்பிரசாரம் செய்து புலிகள்மீது சேறுபூச முயல்கின்றன.

காலம் காலமாக மாணவர்களையும், கல்விமான்களையும் அச்சுறுத்தி கொலைசெய்துவந்த இராணுவமும், தேசவிரோதக் கும்பல்களும் இன்று பிள்ளையையும் கிள்ளி, தொட்டிலையும் ஆட்டுகின்றன.

தமிழ் மக்களின் உரிமை வேட்கை உச்சநிலை அடைந்திருக்கும் இந்தக் காலப்பகுதியில் தேசப்பற்றாளர்களைக் கொலை செய்யத் திட்டமிட்டிருப்பதை அண்மைக்காலச் சம்பவங்கள் வெளிப்படுத்தியுள்ளன.

கொலைச் சம்பவத்தைக் கண்டித்து அமைச்சரவைப் பேச்சாளர் நிமால் சிறிபாலடிசில்வா இரண்டு அதிபர்களும் , புலிகளுக்கு சிறுவர்களை இணைப்பதற்கு ஆட்சேபம் தெரிவித்தவர்கள் என்று கூறிகொலைகளை அரசியலாக்கினார்.

அவர் வெளியிட்ட கருத்து மாணவர்களாகிய எமக்கு காழ்ப்புணர்ச்சியை ஏற்படுத்தி, அரசின் மீது வெறுப்பின் உச்ச நிலையை அடைய வைத்திருக்கின்றது.

நாட்டுப்பற்றாளராக உழைத்த அதிபர் சிவகடாட்சம் சுட்டுக் கொல்லப்பட்டவுடன், கொதிப்படைந்த மாணவர்களை மேலும் கொதிப்படைய வைக்கும் முகமாகவும் தங்களது கொலையை மூடிமறைக்கும் முகமாகவும் பொய்ப் பிரசாரத்தை ஆரம்பித்தபடி அதிபர் இராசதுரையை சுட்டுக்கொன்றிருக்கிறது.

அதிபர் இராசதுரை சுடப்பட்டபோது அங்கு நின்ற கல்வியலாளர்களும், பொது மக்களும் சுடுபவர்கள் இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் தேசவிரோதக் கும்பலைச் சேர்ந்தவர்கள் என்பதை நன்கு அறிந்தும் இருக்கிறார்கள்.

ஆனால், அரசியல் இலாபம் தேட முனைகின்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது அரசியல் பகடைக்காய்களை திட்டமிட்டு நகர்த்த எண்ணுகிறார். துரோகிகளை மக்களே இனங்கண்டு தூரவிலக்கி வைப்பார்கள்.

எதிரிகளை மக்கள் எந்த நிலையிலும் எதிர்க்கத் தயாராக உள்ளார்கள்.

இந்தத் தற்கால யதார்த்த நிலையில் தமிழ் மக்களின் காவலர்களான விடுதலைப்புலிகள் யாரையும் சுட்டுக்கொல்ல வேண்டிய தேவை ஒருபோதும் இல்லை. மத்திய கல்லூரி மாணவர்கள், மற்றும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மாணவர்கள் இராணுவத்துக்கும் தேசவிரோதக் கும்பல்களுக்கும் எதிராகக் கொதிப்படைந்த செய்கைகளை பொய்ப் பிரசாரத்துக்காக அரசு பயன்படுத்துவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

துப்பாக்கி முனையில் இராணுவமும் அவர்களோடு சேர்ந்து இயங்கும் தேசவிரோதக் கும்பல்களும் தமிழ் மக்களை இன்று பலமாக அச்சுறுத்தி வருகின்றது. எமது போராளிகள் எவரும் இல்லாத இந்தச் சந்தர்ப்பத்தில் இராணுவமும் - தேசவிரோதிகளும் தமது கொலைவெறித் தாண்டவத்தில் எமது யாழ்.மக்களை பயன்படுத்துவதை ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம்.

அரசாங்கம் தனது அரசியல் இலாபம் தேடும் முயற்சிகளைக் கைவிட்டு தமிழ் மக்களின் உரிமைகளை அங்கீகரிக்காத நிலையில் தமிழ் மக்கள் உரிமைப் போராட்டத்தை தொடரவேண்டிய நிலையில் உள்ளார்கள் என்பதை வெளிப்படுத்துகின்றோம் எனவும் கூறப்பட்டுள்ளது.

## வெளிமாவட்டங்களிலும் 'கூத்துருவ' நாடகம்

சுதுமலை —

திருமறைக் கலாமன்றத்தால் மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் ஆகிய இடங்களில் 'கொல் ஈனும் கொற்றம்' கூத்துருவ நடாகம் ஆற்றுகை செய்யப்பட்டு வருகிறது.

திருமறைக்கலாமன்ற பிரதி இயக்குநர் ஜோ.ஜோன்சன் ராஜ்குமார் எழுதி நெறியாள்கை செய்துள்ள கூத்துருவ நாடகம் கடந்த 15 ஆம் திகதி முதல் மட்டக்களப்பு பல்கலைக்கழக மண்டபத்திலும், மட்டக்களப்பு நகர மண்டபத்திலும், திருகோணமலை மெதடிஸ்த உயர்தரப் பாடசாலையிலும் மன்னார் நகர சபை மண்டபத்திலும் ஆற்றுகை செயற்படவுள்ளது. கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களில் மேடையேற்றப்பட்ட இந்த நாடகம் நாடளாவிய ரீதியில் தொடர்ச்சியாக ஆற்றுகை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (91)

## புகையிலை நாற்றுமேடை அமைப்பு; வடமராட்சி விவசாயிகள் மும்முரம்

மீசாலை —

வடமராட்சிப் பகுதியில் பொலிகண்டி, ஊறணி, தொண்டமானாறு, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் உள்ள விவசாயிகள் புகையிலை நாற்றுமேடை அமைப்பதில் தற்போது மும்முரமாக ஈடுபட்டு வருவதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

பருமழை ஆரம்பித்துள்ளதைத் தொடர்ந்து புகையிலை நாற்றுமேடைகளை அமைப்பதில் மேற்குறிப்பிட்ட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் ஈடுபட்டுவருகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் நாட்டப்படும் புகையிலைச் செடிகளுக்கான நாற்றுகள் பெரும்பாலும் இந்தப் பகுதிகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டு நடுகைசெய்யப்படுகின்றன.

இந்த நாற்றுக்களை கடற்கரையோரங்களுக்கு அண்மையில் நாட்டுவதன்மூலம் சிறந்த செடியினைப் பெறமுடியும் என்பதால், மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் புகையிலை நாற்றுகள் சிறப்பாகச் செய்கை பண்ணப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (25)

## கொடிவார ஆரம்ப நிகழ்வு

பருத்தித்துறை —

கரவெட்டிப் பகுதியில் வைத்தியசாலை ஒன்றை அமைப்பதற்காக இன்று காலை 10 மணிக்கு தஞ்சை ஐங்கரன் இந்து அறநெறிப் பாடசாலையில் கொடிவார ஆரம்ப நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக அரசாங்க அதிபர் கே.கணேஷ், கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.சிவநேசன், பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், யாழ்.நிகொட் பிரதித்திட்டப் பணிப்பாளர் க.நவரட்ணராஜா, கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக நெல்லியடி வணிகர் கழகத் தலைவர் மு.சுந்தரலிங்கம், நெல்லியடி வணிகர் கழகச் செயலாளர் சி.தங்கராசா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (12)

## பண்ணைப் பாலத்தைக் கழற்றும் இராணுவப் பொறியியலாளர்கள்!



யாழ்ப்பாணம் —

யாழ்.தீவகத்தை இணைக்கும் பண்ணைப்பாலத்தைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ள நிலையில், முன்னர் போடப்பட்டிருந்த இரும்புப் பாலத்தை இராணுவத்தினர் கழற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றனர்.

1991 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் இராணுவத்தினராலேயே இந்தப் பாலம் அமைக்கப்பட்டமையால் அதனை அவர்களே கழற்றும் பணியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ பொறியியலாளர்களின் உதவியுடன் பெருமளவான இராணுவத்தினரும், வீதி அபிவிருத்தி அதிகார சபைப் பணியாளர்களும் இந்த வேலைகளில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (113)

## நிர்வாக சேவை மற்றும் இணைந்த சேவைகள் வினைத்திறன் பரீட்சைகள் வேம்படி மகளிர் பாடசாலையில்

யாழ்ப்பாணம் —

இலங்கை நிர்வாக சேவைகள் மற்றும் அதனோடு இணைந்த ஏனைய பரீட்சைகள் யாவும் எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணத்தில் இந்தப் பரீட்சைகள் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

இலங்கை நிர்வாக சேவை, இலங்கை கணக்காளர் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கை பொறியியலாளர் சேவை, இலங்கை பொலிஸ் சேவை மற்றும் இலங்கை கட்டடக் கலைஞர் சேவையைச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடை மற்றும் இரண்டாம் மொழி ஆகிய பரீட்சைகளே இடம்பெறவுள்ளன.

பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகள் யாவும் பரீட்சைத் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மேற்படி பரீட்சைகள் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் மட்டுமே நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சாவகச்சேரி கூட்டுறவுச்சங்க பொதுச்சபைக் கூட்டம்!

மீசாலை —

சாவகச்சேரி பல.நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய பொதுச்சபையின் முதல் பொதுக் கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பொதுக்கூட்டம் சங்கத் தலைவர் ந.பாலச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. சங்க எல்லைக்குப்பட்ட கிளைகளின் நிர்வாக உறுப்பினர்களில் இருந்து சங்கத்தின் தலைமைப் பொறுப்பு நிர்வாகத்தினர் இதன்போது தெரிவுசெய்யப்படவுள்ளதாகவும் சங்கத் தலைவர் ந.பாலச்சந்திரன் தெரிவித்தார்.

பங்குபற்றவுள்ள சபைப் பிரதிநிதிகள் அங்கத்துவப் பத்திரத்தின் பூர்த்திசெய்யப்பட்ட பிரதிகளை அன்றையதினம் சமர்ப்பிக்கப்படல்வேண்டும் எனவும் அதனை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறும் சங்கத் தலைவர் மேலும் தெரிவித்தார். (25)

## நவராத்திரிதின போட்டி முடிவுகள்

உடுவில் —

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினரால் நவராத்திரி தினத்தை முன்னிட்டு, முன்பள்ளி மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

'ஏ' பிரிவு-பேச்சு

வி.நிஷாளினி, வீ.சஜீவன், வீ.பிரவாகன்

திருமுறை மனனம்

வி.நிஷாளினி, வி.பிரவாகன், ஜெ.சானுஜா

வினாவிடைப்போட்டி

ச.பவதாரணி, ந.சோபிகா, வி.சஜீவன்

'பி' பிரிவு - ஆத்திசூடி

த.பிரீத்திகா, தி.காயத்திரி, யோ.துசாயினி

திருமுறை மனனம்

த.சானுக்கா, பா.தமிழினி, ச.ஆதித்தன்

இனம் காணல்

ச.ஆதித்தன், இ.சுதர்சன், மு.திஷாந், ச.சாரு, தி.காயத்திரி

இவர்களுக்கான பரிசளிப்பு மார்கழி மாதம் நடைபெறும். நாவலர் தினவிழாவில் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (101)

## கற்கோவளம் பாடசாலையில் குடிநீர்ப் பிரச்சினை

சுதுமலை —

பருத்தித்துறை கற்கோவளம் மெதடிஸ்த மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்கள் குடிநீர்ப் பிரச்சினையால் மிக நீண்டகாலமாக அவதிப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

தரம் 1 முதல் 8 வரையான வகுப்புக்களில் 350 மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர். பாடசாலைக்கென குடிநீர்க் கிணறு இருந்தபோதிலும், பாவிக்கமுடியாத நிலையிலுள்ளதாகவும் -

பல அரசசார்பற்ற நிறுவனங்களிடம் இவை பற்றித் தெரிவித்தும் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. (91)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை மூன்று



பெயர் : ரி.சாளினி
முகவரி : பலாலி கிழக்கு

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:



கூப்பனைச் சிறுவனின் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்


## கழிவுப் பொருட்களிலிருந்து பசுந்தாள் பசளை தயாரிப்பு; முதற்கட்ட வேலை ஆரம்பம்

யாழ்ப்பாணம் —

நாளாந்தம் போடும் கழிவுப் பொருட்களைக் கொண்டு பசுந்தாள் பசளை தயாரிப்பதற்கான ஆரம்பக் கட்ட வேலைகளை யாழ்.மாநகரசபை ஆரம்பித்துள்ளது.

பசுந்தாள் பசளை தயாரிப்பதற்கென காக்கை தீவில் அமைக்கப்பட்டு வந்து கட்டட வேலைகள் முழுமையாக பூர்த்தியடையாத நிலையிலும், பசளை தயாரிப்பதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்று வருவதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

மாநகரசபை தினமும் பல மெற்றிக் தொன் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துகின்றது.


இவ்வாறு சேருகின்ற கழிவுப் பொருட்களைக் கொண்டு பசுந்தாள் பசளை தயாரிப்பதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்று வருகின்றனது.

பசளை தயாரிப்பதற்காக கழிவுப் பொருட்கள் தரம்பிரிக்கப்பட்டு வருகின்றன.


கழிவுப் பொருட்களைக் கொண்டு பசளை தயா[illegible]ரிக்கப்படுவதால் - கழிவுப் [illegible]ாருட்களை விரைவாக அகற்றுவதற்கு இலகுவாக இருப்பதுடன், உள்ளூர் விவசாய உற்பத்தியாளர்களுக்கும் குறைந்த விலையில் பசளை வழங்கக் கூடியதாக இருக்கும். இதனால் விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## யா/வடமராட்சி அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில்

### பிரதம குருமார்களின் அருளாசியுரை



பிரதமகுரு பிரம்ம ஸ்ரீ
க.க.சுதர்சனக் குருக்கள் (J.P)



பிரதமகுரு பிரம்ம ஸ்ரீ
க.க.புருஷோத்தமக் குருக்கள்(J.P)

யோ மாம் பச்யதி ஸர்வத்ர ஸர்வம் சமயி பச்யதி!
தஸ்யா ஹம் ந ப்ரணச் யாமி ஸ ச மே தப்ரணச்யதி!! 30

ஸ்ரீமத் பகவத் கீதை தியான யோகம் சுலோகம் 30 பக்கம் 353

யார் என்னை எல்லாவற்றிலும் எல்லாவற்றையும் என்னிடத்திலும் காண்கிறானோ, அவன் காட்சியினின்று நான் மறைவதில்லை. அவனும் என் காட்சியினின்று மறைவதில்லை.

மெய்யடியார்களே! அவனருளாளே அவன்தாள் பணிந்து எல்லாம் வல்ல எம்பெருமான் ஸ்ரீ வல்லிபுரச் சக்கர நாராயணன் கோவிலின் வருடாந்த மஹோற்சவம் சென்ற (02.10.2005) 16 ஆம் நாள் (புரட்டாதி மீ கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இனிதே நடைபெற்றுவருகிறது. நேற்று இரதோற்சவம் எனப்படுகின்ற சம்ஹார உற்சவ மாகும். எங்கள் பாவங்களை அக்னி வடிவான தேரில் பகவான் எழுந்தருளிவந்து போக்கியருளினார். தேரில் வரும் சக்கரமாயவனைக் காணும்போதுஎமது பாவங்கள் அனைத்தும் பொடிப்பொடியாகிவிடும்.


இன்றைய தினம் சமுத்திரத்தீர்த்தமாகும் (17.10.2005) புரட்டாதி மீ 31 ஆம் திகதி திங்கட் கிழமை பூரணை தினத்திலன்று பகவான் தான் மீனாக வடிவெடுத்துவந்த கடலில் மாலை யில் தீர்த்தமாட நீராடச் செல்கின்றார். பகவானும் ஆஞ்சநேயரும் தீர்த்தமாடிய நீரில் நாமும் நீராடி எமது பாவங்களனைத்தையும்தீர்த்துக்கொள்வோம். தீர்த்தம், தீர்த்தோம் இந்த இருநாட்களிலும் பகவானைத் தரிசிக்கும் பக்தகோடிகள் அனைவரும் எல்லாப் பாவங்களினின்றும்விடுபட்டவர்கள் ஆவர். ஸ்ரீ வல்லிபுர மாயவன் பக்தர்கள் அனை வருக்கும்ஸ்ரீ வல்லிபுர மாயவனின் நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

சுபம்

நாராயணன் நம்பிக்கை நயமிகும்

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் பீடம்
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில், புலோலி.

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சமுத்த



ஈழத் திருநாட்டில் ஈடு இணையற்ற வைணவத் திருத்தலங் களுள் முதன்மையான திருத்தலமாக விளங்குவது ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த ஆலயம் அந்நியராட்சியிலும், ஈழப் போர் நடைபெற்ற காலங்களிலும் எந்தவித இடையூறுகளும் இன்றி, எல்லா மதத்தவர்களாலும் வழிபடப்பட்டு இந்து மதத்தைத் தன்நிகரற்று வளர்த்தெடுத்த பெருமை கொண்டது.

மூலஸ்தானத்தில் விஷ்ணுவின் சக்கராயுதத்தை வைத்து வழிபடும் சிறப்புக்குரியது. இந்த ஆலயத்தின் கிரியைகள் சைவ ஆகம முறைப்படி நடைபெறுவது விஷேடித்துக் கூறக் கூடியது. ஞாயிற்றுக்கிழமைகளில் பெரும் பக்தர் கூட்டம் நிறைந்து எம் பெருமானுக்கு விஷேட பூஜைகள் செய்யப்பட்டு, வீதிவலம் வரும் திருக் காட்சியும், ஸ்ரீராம நவமி, ஸ்ரீ கிருஷ்ணஜயந்தி, ஏகாதசி போன்ற சிறப்புமிகு உற்சவங்கள் வெகு விமரிசையாக இடம் பெறுவதையும் நாம் காணலாம்.

ஆலயங்களில் நடைபெறும் மஹோற்சவம் மூலம் நாட்டில் மும்மாரி பெய்து, மக்கள் நல்வாழ்வு வாழவும், நாட்டில் சமாதான மும் - சுபீட்சமும் கிடைக்கப்பெறுகின்றன. மஹோற்சவப் பெரு விழா இத்தலத்தில் புரட்டாதி மாதம் பௌர்ணமி தினத்தை தீர்த்த உற்சவமாகக் கொண்டு 17 தினங்கள் நடைபெறுகின்றன. இதில் பாம்புத் திருவிழா, துகில் திருவிழா, வெண்ணெய்த் திருவிழா, கம்சன் திருவிழா ஆகிய உற்சவங்கள் கண்ண பிரானின் திரு விளையாடல்களை எடுத்தியம்பும் அருங்காட்சிகளாக அமைவன - ஆலயத்தின் சிறப்பு மிகு உற்சவமான சமுத்திரத் தீர்த்தம் மகா விஷ்ணு மச்சமாக வங்கக் கடலில் தோன்றியதை நினைவூட்டு வது அன்றைய நாளே இந்நாள். அதன் வரலாற்றைச் சற்று நோக்குவோம்.

வல்லி நாச்சியார் வராத்துப் பளை ஊரைச் சேர்ந்தவர். வராத்துப்பளை கற்கோவளத்தின் ஓர் பகுதியாகும். வல்லி நாச்சியார் கன்னியாகவே காலம் கழித்தார். பசுக்களை வளர்த்துப் பாதுகாத்தலே அவர் பணியாகியது. கள்ளமில்லாத வெள்ளை யுள்ளமுடைய வல்லி நாச்சியார் நாராயணன் மீது அளவு கடந்த பக்தியுள்ளவர்.

வல்லி நாச்சியார் வாழும் காலத்தில் வங்கக் கடலோர கற்கோவள மீனவருக்கு ஒரு வினோத மீன் துள்ளிக் குதித்து அதிசய விளையாட்டைக் காட்டி வந்தது. வல்லி நாச்சியின் கனவிலும் இது பற்றிய காட்சி தென்பட்டது. மறுநாள்க் காலை ஒரு வெள்ளிக்கிழமை புனிதமாக நீராடிவிட்டு வங்கக் கடற்கரைக்குச் சென்று நீராடி, பக்தி கீதம் பாடி கண்ணா! கோவிந்தா! கோபாலா! என உரக்க கண்ணன் திருநாமங்களை உச்சரித்தும் மீன் வல்லி நாச்சியாருக்குத் தென்படவில்லை. மறுநாள் காலையிலும் அதேபோல் நீராடிவிட்டு கடற்கரைக்கு சென்று முன் போல் கண்ணபிரானை வேண்டியபோது, அப்பிராட்டியின் மடியில் அம்மீன் வந்து விழுந்ததும் மறுகணம் அழகிய ஆண் குழந்தையாக மாறியது. அந்தக் குழந்தையை அணைத்து எடுத்து வருகையில் அந்தப் பெண்மணி மயங்கி விழுந்தாள்.

மீன்பிடிக்க வந்தவர்கள் வலையைத் தொட்டிலாக்கி, அதில் வைத்துத் தூக்கி வரும்போது, களைப்புற்றதால் தாக சாந்தி செய்ய விரும்பினர். தற்போது ஆலயம் அமைந்த இடத்திலேயே

லட்சுமி கணபதி
பல்பொருள் விற்பனை நிலையமும்
தொலைத்தொடர்பகமும்
இலட்சுமணன் தோட்டம்
பிள்ளையார் கோவில்,
தும்பளை
மொபைல் : 0776 578 442
தொலைபேசி : 060 213 074
060 212 562

கிராமிய வங்கியின் கூடிய வட்டியிற் சேமிப்பும், குறைந்த வட்டியில் கடனும் மற்றும்
நூலகத்திற்கு சகலவிதமான நூல்களும் அமைதிச் சூழலில் மீட்டல் செய்யவும்
இரவல் பெற்றுப் பயன்பெறவும்
கட்டைவேலி - நெல்லியடி
ப.நோ.கூ.சங்கம்
021 226 3263
060 221 2540
கரவெட்டி

அம்பாள் ஸ்ரோர்ஸ்
பிரதான வீதி, பருத்தித்துறை
தொ. பே : 021 226 3130

கோடி மாந்தர் வினைகள் தீர்க்கும் ஆலயம் அன்றோ
கோவிந்தன் நாளும் வாழும் ஆலயம் அல்லவோ
☆ வீடியோ
☆புகைப்படப்பிடிப்பு
☆அல்பம் தயாரித்தல்
றஞ்சன் போட்டோ & வீடியோ
பிரதான வீதி, மந்திகை புலோலி

தன் சாபம் நீக்கிடவே
கன்னி சாபம் நீங்கிட
ஜனனி
பல்பொ
நெல்லியடி


யோகாஸ் கிறீம்ஹவுஸ்
கந்த முருகேசனார் சிலையடி மந்திகை
தொ. பே : 0777 155 605

வல்லிபுரம் வீற்றிருக்கும் மாயவனே
வடிவழகா எங்களுக்கு அருள்புரிவாய்
சுவைத்தென்றல்
கிறீம்ஹவுஸ்
சாரையடி புலோலி தெற்கு
தொ.பே : 0776 319 656

செல்லமு
பிரதான வீதி
தொ.பே : 021

சுரபி பதிப்பகம்
267 நாவலர் வீதி யாழ்ப்பாணம்
தொ. பே : 021 222 5107

# ...முத்திர தீர்த்தோற்சவ சிறப்பிதழ்



தொட்டிலை வைத்தனர். தாகசாந்தி செய்ததும் மீண்டும் தொட்டிலைப் பார்த்தபோது குழந்தை திடீரென மறைந்து விட்டது. அந்த இடத்தில் கிழப் பிராமணர் தோன்றி வல்லி நாச்சியாரிடமும், மீனவர்களிடமும் ஒரு சக்கரத்தைக் கொடுத்து அதனைப் பூஜிக்கும்படி கூறிச் சென்றார்.

அதன்படி அவர்கள் சிறுகொட்டில் ஒன்று அமைத்து, சக்கரத்தையும் ஸ்தாபித்து, விளக்கு வைத்து வந்தனர். இந்த அற்புதத்தால் ஈர்க்கப்பட்ட பொது ஜனங்களும் மிகுந்த ஈடுபாட்டோடு கலந்து வரலாயினர். இவ்வாறான வழிபாடே இன்றும் இந்த ஆலயத்தில் காணக்கூடியதாகவுள்ளது.

இன்றைய தினம் பக்தியும், மகிழ்ச்சியும் பொங்கும் திருநாள். ஈழத்து இந்துக்களின் தீர்த்தப் பெருவிழா மாயவனை விரும்பி வழிபடும் அடியார்கள் காதலால் கண்ணீர் மல்கி, உடல் நலம் பெற்று, பேரானந்தம் மென்மேலும் பெருக - சங்கு, சக்கரம், கோவிந்தா! கோபாலா! மாயவா! கேசவா! என்று அன்புருகி நிற்க, ஆலயத்திலிருந்து தீர்த்தக் கரைக்கு சுமார் 3 1/2 மைல் தூரத்துக்கு மணல் குன்றுகள் ஊடாக கால்நடையாக யாத்திரை செய்யும் காட்சி மனங்குளிர வைக்கும். ஸ்ரீகணபதி, ஸ்ரீசக்கர ஆழ்வார், ஸ்ரீஇலக்குமி, ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆகிய தெய்வங்களை இந்தப் பாதையூடாக கற்கோவளப் பகுதி அடியார்கள் கடுகதியாக தூக்கிச் செல்வர்.

கோவிந்தா! கோபாலா! மாயவா! மதுசூதனா! எனும் நாம ஒலி அவர்கள் வாய்களிலிருந்து எழும்பும். இது பார்ப்போரைப் பரவசப்படுத்தும். அத்தோடு, கூன் கொண்டுவந்தவர் - தான் நிமிர்ந்து ஓடும் அளவுக்குத் தீர்த்தக்கரை நோக்கி அவ்வளவு உற்சாகமாகச் செல்வர். வங்கக் கடற்கரைக்கு வல்லிபுர ஆழ்வாரைத் தூக்கிச் செல்பவர்கள் - வல்லி நாச்சியாரைத் தூக்கி வந்த வழி வந்தவர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

பாக்குநீரிணையையும், வங்களா விரிகுடாவையும் இணைத்திருக்கும் தீர்த்தக் கடலில் சக்கரத்தாழ்வாருக்கும், ஆஞ்சநேயருக்கும் அபிஷேக ஆராதனை செய்யப்பட்டு, படகில் ஏற்றப் பட்டு தீர்த்தமாடுவர். இதனைத் தொடர்ந்து அடியவர்கள் நோய், பிணி நீங்க, பாவங்கள் நீங்க - பக்த கோடிகளும் வங்கக் கடலில் தீர்த்தமாடிப் பாவ விமோசனமடைவர். இந்தக் காட்சியைக் காண சமுத்திர அலை களை விஞ்சுமளவுக்கு அடியார் கூட்டம் இலட்சோபலட்சமாக ஒன்று கூடிப் பிரார்த்திப்பார்கள். நாளை ஆலய வீதியில் மேற்குப் புறம் அமைந்த கேணியில் பூரணமான தீர்த்த உற்சவக் கிரியைகள் நடைபெற்று கேணித் தீர்த்தமும் இடம்பெறும்.

இம்முறை சந்திர கிரகணம் இருப்பதால் சமுத்திரத் தீர்த்தம் மாலை 4.00 மணிக்கு (பழைய நேரம்) நடைபெறும்.

அத்துடன் இம்முறை புரட்டாதியில் இரண்டு பூரணைதினம் இருப்பதால் இரண்டாம் பூரணை தினத்தை மையமாக வைத்து உற்சவங்கள் தீர்மானிக்கப்பட்டன.

ஓம் நமோ நாராயணா!

க.அருள், பா.மணிக்குமார்

காலம் ... ள்ளை ... க்கு ஒரு ... ச்சியின் ... ர்தமாக ... விந்தா! ... ருக்குத் ... று முன் ... ந்ததும் ... எடுத்து ... போது, ... லேயே

## வாழ்த்துச் செய்தி

ஒரு ஆலயத்தில் மூலமூர்த்தியாக எழுந்தருளியிருக்கும் இறைவனின் திருக்கோலத்தைப் பொறுத்து உற்சவங்கள் இடம் பெறும்.

வல்லிபுர ஷேத்திரத்தில் நாராயணனின் திருவிளையாடல்கள், லீலைகள், அவதார நோக்குகள் ஆகியன உற்சவங்கள் மூலம் சித்தரிக்கப்படுகின்றன. எனினும் தேரோட்டம், தீர்த்த உற்சவங்கள் ஒரே ஒழுங்கு முறையில் எல்லா ஆலயத்திலும் அமையும். வல்லிபுர மாயவனின் பார்த்திப வருட மஹோற்சவம், இந்த மாதம் 2 ஆம் திகதி ஆரம்பித்து தேரோட்டம், தீர்த்தம் ஆகியன முறையே 16 ஆம் 17 ஆம் திகதிகளில் நடைபெறும்.

இந் நன்நாட்களில் வெளிவரும் பத்திரிகைகள் தாங்கிவரும் சிறப்பிதழ்களுக்கு இந்தச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (நேற்று) வல்லிபுர மாயவன் உக்கிர தோற்றத்தில் காட்சிதந்து சித்திரத் தேரில் எழுந்தருளி வீதிவலம் வந்தார். வீதிவலம் நிறைவுற்றபோது உக்கிரம் மறைந்து சாந்தநாயகனாக பச்சைசாத்தி இருப்பிடம் வந்தடைந்தார்.

17 ஆம் திகதி பூரணை தினமான திங்களன்று சந்திரோதய நேரத்தில் சமுத்திரத்தில் தீர்த்தமாடும் பொருட்டு பிற்பகல் 4.00 மணியளவில் சமுத்திரம் நோக்கி தோளில் சுமந்து செல்ல, பக்தர்கள் புடைசூழ எழுந்தருள்வார்.

சமுத்திரத்தில் அனுமார்,சண்டேஸ்வரர் ஆகியவற்றுக்கு அபிஷேகம் செய்தபின் சந்திரோதயத்தில் தீர்த்தமாடியதுடன் ஆலயம் நோக்கிப் புறப்படுவார்.

வல்லிபுர மகா ஷேத்திரத்தின் அருங்காட்சிகளை நேரில் தரிசித்து, அன்றில் ஒளி,ஒலி பரப்பு மூலம் கண்டும், கேட்டும் அன்றில் இந்தச் சிறப்பிதழ்கள் மூலம் மனம் திருந்த எம் பெருமானின் அருளை யாவரும் பெறவேண்டுமென பரந்தாமனை யாசிக்கின்றேன்.

ஓம் நமோ நாராயண!

வல்லிபுர ஆழ்வார் ஆலய
முகாமை அறங்காவலர்


...ம் ...263 ...540 ...பி

**கௌஷி வாடகைப் பொருள் சேவை**
யக்கோவளை ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை
மணப்பந்தல், பிளாஸ்ரிக் கதிரை, மேசைகள், மாலைகள், சமையல் பாத்திரங்கள் மற்றும் சகலவிதமான வைபவங்களுக்குத் தேவையான பொருட்களையும் பெற்றுக் கொள்ளலாம்
இ.பரமதாஸ் 0776 905 798 கற்கோவளம்

**கண்ணன் ரான்ஸ்போட்**
கொழும்பு - யாழ்ப்பாணம்
0776 146 717
உரிமையாளர் : லிங்கம்
அத்தாய் அல்வாய் கிழக்கு, அல்வாய்

...க்கிடவே இந்திரன் வந்தான்
...நீங்கிடவே வல்லிநாச்சியாரும்
வல்லிபுரம் வந்தாள்
...ி
...பல்பொருள் வாணிபம்
கரவெட்டி

☆ வீடியோ, புகைப் படப்பிடிப்பு
☆ அல்பம் தயாரித்தல்
☆ வான், கார் சேவை
**ஸ்ரீ வல்லிபுர போட்டோ**
**நல்லூர் ஒளியருவி வீடியோ**
நல்லூர் 021 222 2604 0773 024 413
புலோலி 021 222 3459 0777 739 673

அனைத்து வகையான ஆடை வகைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்
புதிய **சுசில் புடவையகம்**
பிரதான வீதி, பருத்தித்துறை

**லக்ஷ்மி தொலைத்தொடர்பகமும்**
பல்பொருள் வாணிபமும்
கூவில், புலோலி
தொ.பே : 021 226 3131


**...லமுத்தூஸ்**
புடவை மாளிகை
நெல்லியடி
...பே : 021 226 3283

எப்போது தர்மம் ஓங்குகிறதோ அப்போதெல்லாம்
அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவதற்காக
நான் யுகம்தோறும் அவதரிக்கின்றேன் - ஸ்ரீகிருஷ்ணர்
**லிங்கம் கிறீம் ஹவுஸ்**
119 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே : 021 222 7327

**ஆஷா தையலகம்**
பிரதான வீதி, பருத்தித்துறை
உரிமையாளர் : நடேசமூர்த்தி
தொ. பே : 0779 557 831

# அரசியற்துறைப் பொறுப்பாளருடன் ம.ம.மு.தலைவர் சந்திரசேகரன் சந்திப்பு

கிளிநொச்சி



மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திர சேகரன் - தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் கடந்த வெள்ளிக் கிழமை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத் தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது - தற்போதைய அரசியல் நிலைமைகள், மற்றும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகக் கலந்துரை யாடல் நடத்தப்பட்ட தாக சந்திரசேகரன் தெரிவித் தார்.

இந்தச் சந்திப்புக் குறித்து சந்திரசேகரன் தெரிவிக் கையில் -

எதிர்வரும் தேர்தலில் மலையக மக்கள் முன் னணி மேற்கொண்டிருக்கும் முடிவை, விடு தலைப் புலிகள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். தென்னிலங் கையின் அரசியல் நிலைமைகளை உன்னிப்பாக அவதானிப்பதாகவும், மக்களின் வாக்களிக்கும் உரிமையில் தலையிடப்போவ தில்லை என்றும் சு. ப. தமிழ்ச்செல்வன் கூறினார்.

தென்னிலங்கை அரசியல் நிலைமைகளால் தமிழ்மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற் பட்டால், அதை எதிர்கொள்ளவும் விடுதலைப் புலிகள் தயாராக இருப்பதாகத் தமிழ்ச்செல்வன் தெரிவித்தாகக் கூறினார்.

இடைக்காலத் தன்னாட்சி நிர்வாக சபை, சுனாமி பொதுக்கட்டமைப்பு இனப்பிரச்சி னைக்கு உரிய அரசியல் தீர்வுகாணுதல் ஆகிய வற்றை நிபந்தனைகளாக முன்வைத்து ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரம சிங் கவை மலையக மக்கள் முன்னணி ஆதரிப்பதாக ஏற்கனவே அறிவித்ததும் குறிப்பிடத்தக்கது.

# உள நலம் பாதிப்புக்குள்ளானோர் பங்குகொண்ட விளையாட்டுப் போட்டி!



கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்ட உள வள வைத்திய நிபுணர் யூடிரமே ஸின் ஏற்பாட்டில் அனைத்துலக உளவள நாளை முன்னிட்டு - நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி மத்திய விளையாட்டரங்கில் உளவளம் பாதிக்கப்பட்டவர் களுக்கான விளையாட்டுப் போட்டிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

இந்த நிகழ்வுகளில் கலைமதி இல்லம், சந்தோச இல்லம், அன்புச் சோலை, கருணா நிலை யம், வெற்றிமனை என்பவற் றைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற் பட்ட உளநிலை பாதிக்கப்பட் டவர்கள் கலந்து கொண்டனர்.

வடக்கு - கிழக்கு உளவளத் துணை நிபுணர் பேராசிரியர் தயா சோமசுந்தரம் தலைமை யில் - கிளிநொச்சி மாவட்ட உளவள வைத்திய கலாநிதி யூடி ரமேஸ் ஜெயக்குமார் ஒருங்கி ணைப்புச் செய்த இந்த நிகழ்வில் பொதுச் சுடரை மூன்று மாவீரர் களின் தந்தையாரான அன்புச் சோலையில் பணியாற்றும் மாணிக்கமும், எல்லைப்படை மாவீரர் பாபுவின் துணைவியா ரான வெற்றிமனையில் பணிபுரி யும் அருண்மேரியும், அன்னை இல்ல உளவள ஆலோசகர் கலியு கவரதனும் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி ஏற்றி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து வர வேற்புரையை சந்தோஷ இல் லப் பொறுப்பாளர் சபாவும், ஆசியுரையை புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பனும் வழங்கினர். அதனைத் தொட ர்ந்து விளையாட்டுப் போட்டி கள் ஆரம்பமாகின.

மனநிலை பாதிக்கப்பட்ட வர்களுக்கான போட்டிகளாக- சமநிலை ஓட்டம், பழம் பொறுக் குதல், தண்ணீர் நிரப்புதல், பலூன் உடைத்தல் , வேகநடை என்பன இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் கனேடிய செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர் ந்த றோபேட் ரெயிலர், கரோல் பிறவுன் சர்வதேச செஞ்சிலு வைச் சங்கத்தைச் சேர்ந்த சுசான் ரெயிலர் கருணா நிலை யத்தைச் சேர்ந்த அருட்தந்தை சாள்ஸ் டேவிட் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டோர் பராமரிப்பு நிறுவனங்களின் பணியாளர் கள், தனியார் நிறுவனங்களின் உத்தியோகஸ்தர்கள், போராளி கள்,பொதுமக்கள் எனப் பெரு மளவானோர் கலந்து கொண்ட னர்.

அத்துடன், மனநிலை பாதிக் கப்பட்டவர்களின் கலை நிகழ் வுகளும் நேற்றுமுன்தினம் மாலை கருணா நிலைய மண்டபத் தில் இடம் பெற்றன. உளநிலை பாதிக்கப்பட்டவர்களில் பெரும் பாலோனோர் இராணுவ வன் செயல்களால் பாதிக்கப்பட் டவர்கள் என்பதும் இங்கு குறிப் பிடத்தக்கது.

# பெரும்போக பயிர்ச்செய்கை; கால அட்டவணை அறிவிப்பு!

கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்டத் திலுள்ள 8 பிரதான நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் 2005 -2006 ஆம் ஆண்டு பெரும்போக பயி ர்ச் செய்கைக்கான கால அட்ட வணையை மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் அறி வித்துள்ளார்.

இதன்படி இரணைமடுக் குளம், வன்னேரிக்குளம், அக்க ராயன்குளம், கல்மடுநகர்க் குளம், கரியாலை நாகபடு வான்குளம், பிரமந்தனாறு புது முறிப்புக் குளம் கனகாம் பிகைக்குளம் ஆகியவற்றில் இந் தப் பெரும்போக பயிர்ச்செய் கைக்கு மூன்றுமுதல் மூன்றரை மாதங்கள் கொண்ட நெல் லினத்தையோ, நான்கு முதல் நான்கரை மாதங்கள் கொண்ட நெல்லினத்தையோ நடுகை செய்ய முடியும்.

விவசாயிகள் எதிர்வரும் நவம்பர் 11 ஆம் திகதிக்கு முன் னர் வாய்க்கால்களை துப்புரவு செய்யவேண்டும்.

வாய்க்கால் துப்புரவு செய் யத் தவறினால் பாகத்துக்கு 50 ரூபா தண்டப்பணமாக அற விடப்படும்.

மூன்று முதல் மூன்றரை மாத கால நெல்விதைப்பு நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னரும், நான்கு முதல் நான்கரை மாதகால நெல்விதைப்பு நவம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னரும் மேற்கொள் ளப்படல் வேண்டும்.

பெரும்போகப் பயிர்ச்செய் கைக்காகப் பிரதான குளங்களில் இருந்து நவம்பர் இருபதாம் திகதி நீர்விநியோகம் ஆரம்ப மாகி, மார்ச் 30 திகதி வரை இடம் பெறும்.

பயிர்ச்செய்கையை கருத்திற் கொண்டு, நவம்பர் 15 முதல் மார்ச் 30 ஆம் திகதி வரை கால் நடைகளைக் கட்டுப்படுத்துதல் வேண்டுமெனவும், கிளிநொச்சி அரச அதிபர் இராசநாயகம் அறி வித்துள்ளார்.

## காலச் சுவட்டில்...

### இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

**ஒக்ரோபர் - 17**

1912 : துருக்கி, பல்கேரியாவுடனும், செர்பியாவுடனும் உறவை முறித்துக் கொள்வதாக அறிவித்தது.

1918: செக்கோஸ்லேவாகியா குடியரசு நாடானதாக அறிவித்தது.

★ ஹங்கேரி விடுதலை அடைந்ததாக அறிவித்தது.

1922: முதன் முதலாக நாடகம் ஒன்று பிரிட்டன் வானொ லியில் ஒலிபரப்பப்பட்டது.

1927: ஜேர்மனியில் ஹிட்லரின் இனவெறி ஆட்சி தீவிரமான தைத் தொடர்ந்து புகழ்வெற்ற விஞ்ஞானியும், அணு குண்டின் தந்தையுமான அல்பேர்ட் ஐன்ஸ்டீன் அங் கிருந்து வெளியேறி நியூஜெர்சியில் பிரின்ஸ்ட்டனில் குடியேறினார்.

1956: ராணி இரண்டாம் எலிசபெத்தினால் பிரிட்டனின் கம் பர்லாண்டில் நிறுவப்பட்ட அணுமின் நிலையம் அதி கார பூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

1965: நியூயோர்க் ரைம்ஸின் இன்றைய பதிப்பு 946 பக்கங் களுடன் வெளிவந்தது. நிறை 3.4 கிலோவாக இருந்தது.

1972: தென் இந்தியாவில் தி.மு.க.வில் இருந்து இந்த மாதம் 10 ஆம் திகதி வெளியேற்றப்பட்ட எம்.ஜி.ஆர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரில் புதிய கட்சியைத் தொடங்கினார்.

★ தென் கொரியாவில் இராணுவ ஆட்சி பிரகடனம் செய் யப்பட்டது.

1973: அரபு எண்ணெய் உற்பத்தி நாடுகள், எண்ணெய் உற்பத் தியைக் குறைத்து விட்டு, விலையை உயர்த்தும் முடி வினை எடுத்தன.

1977: மொரிஷியஸ் தீவில் திஹாய் என்ற இடத்தில் ஜகத் முராரி என்பவர் மனைவி, குழந்தைகளை வழியனுப்ப வீட்டை விட்டுப் புறப்பட்டார். பக்கத்து வீட்டுக்காரரான அந்த நாட்டு நீதிபதி வில்லியம்ஸ் தன் வீட்டுக்கு வந்து தேநீர் அருந்தி விட்டுச்செல்லுமாறு ஜகத் முராரியை அழைத்தார். ஜகத் முராரி நீதிபதி வீட்டை நோக்கி ஒரு சில அடிகள் தூரம் சென்றிருப்பார். மனைவி, பிள்ளைகள்,நீதிபதி அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே ஜகத் முகாரி திடீரென மறைந்து போனார். இது எப்படி நடந் தது? இவர் எவ்வாறு மாயமானார்? என்பது இன்று வரை விந்தையாகவே உள்ளது.

1979: இந்த ஆண்டுக்கான சமாதானத்துக்குரிய நோபல் பரிசு அன்னை தெரேசாவுக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப் பட்டது.


1981: கவியரசு கண்ணதாசன் காலமானார்.

தொகுப்பு~ சந்துரு

# சிறுவர் இல்ல சிறார்களுக்கான கராத்தே சுற்றுப்போட்டி

கிளிநொச்சி

அனைத்துலக சிறுவர் நாளை முன்னிட்டு - இளையோர் செயற் பாட்டு நிறுவனத் தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவ ட்ட அபிவிருத்திச் சங்கத்ததால் கிளி நொச்சி - முல்லைத் தீவு மாவட்டங்க ளின் சிறுவர் இல்லங் களைச் சேர்ந்த 18 வயதுக்குட்பட்டோருக் கான முதலாவது கராத்தே சுற்றுப் போட்டி கடந்த வெள் ளிக்கிழமை கிளி நொச்சி தூயவன் அரசறிவியற் கல் லூரியில் நடைபெற்றது.



இந்தப் போட்டியில் தமிழீழ கராத்தே சங்கத் தலைவர் இரத்தினசோதி, தமிழீழ விளையாட்டுத் துறை இணைப்பாளர் இன்பன், கிளிநொச்சி மாவட்ட கராத்தே சங்கத் தலைவர் விஜயராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இந்த நிகழ்வுக்கு கிளி நொச்சி, முல்லை மாவட் டங்களை சேர்ந்த பெருமள வான தற்காப்பு வீர. வீராங் கனைகள் கலந்து கொண் டமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு

வைர வரிகள்

அடுத்தவனைப் பற்றிப் பேசும்பொழுது தான் ஒருவன் தன் குணத்தை வெளிப் படுத்திக் கொள்கிறான்.

- ஜீன் பால் ரீக்டர் -

## நமது நோக்கு

# போர் ஆபத்து குறித்த எச்சரிக்கையும்; அது தொடர்பான சில செய்திகளும்...!

தென்பகுதியில் ஜனாதிபதித் தேர்தல்களம் நோக்கிய அரசியல் நகர்வுகளின் எதிரொலிகளும், தாக்கங்களும், வடக்கு - கிழக்கில் மீண்டும் ஒரு போர்க்களத்தைத் திறப்பதற்கான சூழலை மிகவும் தீவிரமாக உருவாக்குவதாகவே அரசியல் மற்றும் பாதுகாப்புத்துறை சார்ந்த ஆய்வாளர்கள் பலரும் கருத்துக் கூறத் தொடங்கியுள்ளமையானது, நாடு எதிர்கொள்ளவுள்ள நெருக்கடி நிலைக்குக் கட்டியம் கூறுவதாகவே உள்ளது.

தென்பகுதி - தேர்தல் வன்செயல்களால் மெல்ல மெல்ல அச்சமுறத் தொடங்கியுள்ள நிலையில், கிழக்கிலும் வடக்கிலும் அரச படையினரதும், அவர்களின் துணைப்படையினரதும் நிழல் யுத்த வன்செயல்களும், அச்சுறுத்தல்களும் அதிகரித்துவருவதாக வெளிவரும் செய்திகள், சமாதான அனுசரணையாளர்களையே நம்பிக்கை இழக்க வைக்கும் சூழலை உருவாக்கிவிட்டுள்ளது.

இலங்கையில் தற்போது நிலவும் சூழ்நிலையில், மீண்டும் ஒரு பயங்கரமான யுத்தம் ஏற்படக்கூடிய ஆபத்து அதிகரித்துவருவதாகவும், சமாதான உடன்பாட்டில் கையெழுத்திட்ட இருதரப்பும் முழுமையான போரொன்றிற்கான தயாரிப்புக்களில் ஈடுபட்டுவருவதாகவும், இந்தப் போர் ஏற்படுவதற்கான பிரதான காரணியாக 'கருணா குழு' என்ற பெயரிலான இராணுவக்கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அமைப்பே இருப்பதாகவும், நோர்வே அரசின் விசேட தூதுவராக தற்போது இலங்கை வந்துள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் முன்னாள் தலைவரான மேஜர் ஜெனரல் ட்ரொண்ட் புறாவ் ஹொவ்டே அவர்கள் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் தெரிவித்த கருத்தானது, பல செய்திகளை தெளிவுபடுத்துவதாகவே கூறமுடியும்.

போர்நிறுத்த உடன்பாடு கையெழுத்தாகி கிட்டத்தட்ட நான்காண்டுகள் நிறைவடையவுள்ள நிலையிலும் சமாதான நகர்வு குறித்த முயற்சிகளில் இலங்கை அரசின் விசுவாசமற்ற, முரண்பாடுமிக்க செயற்பாடுகளால் 'சாண் ஏற முழம் சறுக்கும' நிலையே தொடர்ந்து வந்துள்ள சூழலில், அதன் எதிர்காலம் குறித்த நம்பிக்கையானது, தற்சமயம் முற்றாகவே சிதறுண்டு போகும் அபாயம் தோன்றியுள்ளதையே அவரது மேற்குறித்த தொனியிலான கருத்துக்கள் வலியுறுத்தவதாகவுள்ளன.

சமாதான முயற்சிகளுக்கான கால்கோள் இடப்பட்ட காலப்பகுதியில் ஆட்சிப்பொறுப்பில் முரண்பாடான அரசியல் கொள்கைகளைக் கொண்ட இருபேரினவாதத் தலைவர்களான சந்திரிகாவும், ரணில்விக்கிரமசிங்காவும் முறையே ஜனாதிபதியாகவும், பிரதமராகவும் இருந்தமையானது ஒரு அரசியல் அபசகுனமாகவே இருந்தது.

சமாதானத்தைப் பற்றிப் பேசிக்கொண்டு அரசியல் நடத்த நினைத்த ரணிலும், சமாதானத்திற்கான யுத்தத்திற்கு மதிப்பளித்து தலைமைதாங்கிய சந்திரிகாவும், பேரினவாதத்தின் இருமாறுபட்ட அரசியல் முகாம்களுக்கு தலைமைதாங்கும் நபர்களாக இருந்தமையானது, சர்வதேச அமைதி முயற்சிகளுக்கு நிரந்தரமானதடையாக இருக்கப்போவதை நோர்வே அனுசரணையாளர்கள் அறிந்திராவிட்டாலும் - தமிழ்மக்கள் நன்கு அறிந்தே இருந்தனர்.

ஆனால், இந்த மூன்றரை ஆண்டுகால சமாதான முயற்சிகளின் பெறுபேறுகளை மதிப்பீடு செய்யும் அவர்களுக்கு இப்போதுதான் உண்மைநிலை தெரியஆரம்பித்துள்ளது.

ஒப்புக்கொண்டதன் பிரகாரம், போர்நிறுத்த மற்றும் புரிந்துணர்வு உடன்பாட்டின் மிக முக்கியமான எந்தவொரு அம்சத்தையும் அரசாங்கம் நிறைவேற்றவில்லை என்ற கசப்பான உண்மையை சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளவேண்டும்.

அரசு அவற்றை முழுமையாக நிறைவேற்றியிருக்குமேயானால் அல்லது அனுசரணையாளர்கள் அதனை நிறைவேற்ற வைத்திருப்பார்களேயானால், புறாவ் ஹொவ்டே இன்று இப்படியான எச்சரிக்கையூட்டும் கருத்துக்களைச் சொல்லவேண்டிய அவசியம் இருந்திருக்காது.

மிகவும் அவசியமான புரிந்துணர்வு உடன்பாட்டின் சாதாரணமான அம்சங்களையே நிறைவேற்றப் பின்னடித்த அரசாலும், அதற்குப் பிரதான முட்டுக்கட்டையாக இருந்த ஜனாதிபதியாலும் தமிழ்மக்களின் வாழ்வியல், அரசியல் உரிமை சார்ந்த பிரச்சினைகளுக்கு நியாயமான, உறுதியான தீர்வொன்றைத் தரமுடியுமா? தந்தாலும்கூட அதனை ஆத்மசுத்தியுடன் அமுல் செய்ய முடியுமா? என்ற கேள்விகளுக்கான ஒரே தெளிவான பதில் 'இல்லை' என்பதேயாகும்.

இந்தப் பதில், சமாதானத்தை வலியுறுத்துவோருக்கும், அதற்கான அனுசரணைப் பணியை மேற்கொள்வோருக்கும் புதிதாக, நம்பிக்கையற்ற ஒன்றாகத் தென்படலாம்.

ஆனால், இதனைவிடவும் வேறு ஒரு நம்பிக்கையூட்டும் பதில் எவரிடமிருந்தும் தமிழ்மக்களுக்கு சமாதானம் குறித்து கிடைக்கப்போவது கிடையாது.

இது இலங்கை அரசு தனது செயற்பாடுகளால் தன்னைப்பற்றி தமிழ்மக்களின் மனதில் ஏற்படுத்தியிருக்கின்ற ஆழமான அபிப்பிராயத்தின் அடிப்படையில் உருவான அனுபவ வெளிப்பாடேயாகும்.

அவர்களின் மனதில் பதிந்துள்ளதெல்லாம் - 'யுத்தமா? சமாதானமா?' என்ற ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஆதிக்க வெறிபிடித்த, மனிதப் பண்பற்ற, சர்வாதிகாரத் தொனியில் அமைந்த 'சவால்' வார்த்தைகளும்...


'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற சந்திரிகா அம்மையாரின் தமிழின அழிப்பு நடவடிக்கைகளுக்கான விளக்கமும் தான்...

இந்த பௌத்த - சிங்கள ஏகாதிபத்தியத்தின் பாரம்பரிய குணாம்சத்திலிருந்து அவர்களைப் பிரித்தெடுத்து, சமாதான நகர்வுகளுக்குள் விசுவாசத்துடன் ஈடுபடுத்த நோர்வே அரசு எடுத்த - எடுத்துவருகின்ற முயற்சிகளில் அவர்களுக்கு நம்பிக்கையீனம் ஏற்பட்டிருப்பதன் எதிரொலியே 'புறாவ் ஹொவ்டே' அவர்களின் 'போர்' குறித்த எச்சரிக்கை வார்த்தைகளாகும்.

பௌத்த - சிங்கள பேரினவாதம் மனிதாபிமானத்துக்கு மதிப்பளித்த வரலாறு, இந்த நாட்டில் கிடையாது என்பதை அமைதி விரும்பிகள் இனிமேலாவது உணர்ந்துகொள்வது நல்லது.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# போருக்கு அழைப்பு விடுக்கும் மஹிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனம்!

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனத்தை சுதந்திரக் கட்சிதான் தயாரிக்கும் என்று வெளிநாடுகளிலிருந்து திரும்பியதும் ஜனாதிபதியும் சுதந்திரக் கட்சியின் தலைவியுமான சந்திரிகா அம்மையார் அறிவித்திருந்தார். ஜே.வி.பியுடனும், ஹெல உறுமயவுடனும் மஹிந்த ராஜபக்ஷ உடன்படிக்கை செய்துகொண்டதைப் பார்த்தபின்னர், அம்மையார் இப்படி அறிவித்திருந்தார். அம்மா வெளிநாடுகளில் சுற்றித் திரிந்தாலும், உஷாராகத்தானிருக்கிறார் என்றுதான் நானும் மற்றும் பலரைப் போல் நினைத்திருந்தேன். ஆனால், இப்ப மஹிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனத்தைப் பார்க்கும்போது ஜனாதிபதி தேர்தல் முடியும்வரை அம்மையார் நாடு திரும்பாமலிருந்தாலும் ஆச்சரியமில்லைப்போல் தெரிகிறதே என்று நண்பர் பரமசிவம் என்முன் உட்கார்ந்திருந்து சொன்னார்.

ஏன் இப்படிச் சொல்கிறீர்? சுதந்திரக் கட்சிக்குத் தெரியாமல் தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டிருப்பதாக நீர் நினைக்கிறீரா? என்று கேட்டேன்.

நினைக்கிறதென்ன? ஜே.வி.பியினதும், ஹெல உறுமயவினதும் கொள்கைகள்தானே மஹிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனம் என்ற கொள்கை விளக்கப் பிரகடனத்தில் இடம்பெற்றிருக்கிறது. வடக்கு-கிழக்குப் பகுதிகளில் சுனாமியால் பாதிக்கப்பட்டமக்களுக்கு வெளிநாடுகள் மனமிரங்கிக் கொடுத்த நிவாரண உதவிகளைப் பங்கிட்டுக் கொடுப்பதற்குப் பொதுக் கட்டமைப்பு ஒன்று அமைக்கவேண்டுமென்று சந்திரிகா அம்மையார்தான் முதலில் சொன்னார். இப்பொதுக்கட்டமைப்பை அமைக்க புலிகள் ஒப்புக்கொண்டு, அரசுடன் பேசினர். இதில் உடன்பாடு ஏற்படவில்லை. இதன்பின் சமாதான அனுசரணையாளர்களான நோர்வே, பொதுக்கட்டமைப்பு அமைக்க ஒரு யோசனை தெரிவித்தது. இதனை ஏற்கக்கூடாதென்றும் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடக்கூடாதென்றும் இவ்விதம் பொதுக் கட்டமைப்பு செய்தால், அது நாட்டைப் பிரித்துவிடுமென்றும் ஜே.வி.பியும், ஹெல உறுமயவும் கடுமையாக எதிர்த்தன. பின்னர், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளில் சுமார் ஐம்பது நாடுகள் கலந்துகொண்ட மாநாடு ஒன்று கண்டியில் நடந்தது. பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுவதற்கு ஜே.வி.பியும், ஹெல உறுமயவும் பலத்த எதிர்ப்புத் தெரிவித்தபோதிலும், பொதுக்கட்டமைப்பு என்ற பெயரை மட்டும் மாற்றி அதில் புலிகளின் சார்பில் ஒருவரும், அரசின் சார்பில் ஒருவரும் கையெழுத்திடப்பட்டது. கண்டியில் நடந்த மாநாட்டில் தனது உயிரே போனாலும், இக்கட்டமைப்பை அமைப்பேன் என்று அம்மையார் சொன்னார். கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டதால், தாங்கள் அரசிலிருந்து வெளியேறுவதாக ஜே.வி.பி அறிவித்தது. ஆனால், ஹெல உறுமய பிக்கு ஒருவர் வழக்குப்போட்டு கட்டமைப்பைக் கட்டிவைத்துவிட்டார். இதன்பின் அம்மையார், தம்பி வெளிவிவகார அமைச்சருடன் வெளிநாடு போனார். மஹிந்தவுடன் ஜே.வி.பி. பேச்சு நடத்தி உடன்படிக்கையில் கைச்சாத்திட்டது. ஹெல உறுமயவுடனும் கைச்சாத்திடப்பட்டது. அம்மையார் சில நாட்கள் கழித்துத்திரும்பிவந்தார். மஹிந்தவையும் சந்தித்தார், பேசினார். மீண்டும் வெளிநாடு போய் திரும்பினார். இப்பொழுது மீண்டும் அம்மையார் லண்டன் போயி ருக்கிறார். மஹிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளி வந்திருக்கிறது. அம்மையாரின் அதிகாரப் பரவலாக்கல் யோசனையோ பொதுக்கட்டமைப்பு செயற்படுத்தப்படுமென்றோ எதுவும் இல்லை. ஜேவிபியின் தேர்தல் விஞ்ஞாபனம் மாதிரியே வந்திருக்கிறது. அதி காரப் பர வலாக்கலோ சமாதானப் பேச்சு வார்த்தையோ எதுவுமே தேர்தல் விஞ்ஞாபனத்தில் இல்லை என்று பரமசிவம் கேட் டார்.


பார்க்கப்போனால், மஹிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனம் போருக்கு அறைகூவல் விடுக்கும் விஞ்ஞாபனமாகவே இருக்கிறதாமே என்றேன்.

பின் என்ன? பிரிவினைக்கு முற்றுப் புள்ளி வைப்பது, ஆயுதங்களைக் களைவது, ஜனநாயக வழிக்குத் திரும்புவது பற்றியே விடுதலைப் புலிகளுடன் பேசப் போவ தாக மஹிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் விஞ்ஞா பனத்தில் தெரிவித்திருக்கிறார். சுயநிர்ணய உரிமை பாரம்பரிய தாயகம் என்ற பேச்சுக்களுக்கெல்லாம் இட மில்லையென்றும் மஹிந்த தமது தேர்தல் விஞ்ஞாபனத் தில் சொல்லியிருக்கிறார். பிரிவினைக்கு முடிவு கட்டவும், ஆயுதங்களைக் களையவும், ஜனநாயக வழிக்கு வரவும் விடுதலைப் புலிகளுக்கு குறிக்கப்பட்ட கால எல்லையும், நேரமும் நிர்ணயிக்கப்படுமென்றும் தெரிவித்திருக்கிறார். இவற்றை மக்கள் ஏற்றுக்கொண்டால் விடுதலைப் புலிகளுக்கு பகிரங்கமாக அறிவிப்பாரென்றும், பின்னர் அவற்றை உடனடியாக செயற்படுத்துவாரென்றும் மஹிந்த சொல்லியிருக்கிறார். இதுமட்டுமல்ல, சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களுக்கென உரு வாக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பு செயற்படுத்தப்ப டமாட்டாது. இதற்குப் பதிலாக ஜெயலங்கா என்ற பெயரில் வடக்கு-கிழக்கு மக்களையும், மக்களின் அமைப் புக்களின் பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு புதிய திட் டம் உருவாக்கப்படுமென்றும் கூறியிருக்கிறார். போர்நி றுத்த ஒப்பந்தம் மீள்பரிசீலணை செய்யப்படும். பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு இடமில்லாதபடி இது திருத்தப்படும் என்று கூறியுள்ள மஹிந்த, போர் நிறுத்த ஒப்பந்தத்தைக்கண்டித்திருக்கிறார் என்று பரமசிவம் சொன்னார்.

நீர் சொல்வதைப் பார்த்தால், மொத்தத்தில் இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் சந்திரிகா அம்மையாரின் மூஞ்சியில் கரிபூசுவது போலல்லவா? இருக்கிறது என்று கேட்டேன்.

சந்திரிகா அம்மையாரை இப்போதே செல்லாக்காசாக மஹிந்த மாற்றிவிட்டார். இதுதான் இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் வெளிவந்தபின்னும் மக்கள் மூஞ்சியில் விழிக்கவேண்டுமா என்று லீவு போட்டுவிட்டு அம்மையார் லண்டன் போய்விட்டார் என்று நினைக்கிறேன். மஹிந்த, ஜனாதிபதியானால் அநுராவுக்கு அமைச்சரவையில் நல்ல இடம் கிடைக்குமோ என்று கூடச் சொல்லமுடியாது போலிருக்கிறது என்றார் பரமசிவம்.

அப்போ - மஹிந்த வெற்றிபெற்று ஜனாதிபதியாகப் பதவியேற்பதற்குள் போர்தான் அடுத்த கட்டத்தை முடிவு செய்யுமோ என்றேன். அப்படித்தான் இருக்கும்போல என்றபடி பரமசிவம் நடந்தார்.





# ஜனாதிபதித் தேர்தலும் குடா நாட்டு மக்களும்!

சிறீலங்காவில் ஜனாதிபதி வேட்பாளர் நியமனம் முற்றுப் பெற்றுவிட்டது. ஜனாதிபதித் தேர்தலில் பதின் மூன்று பேர் போட்டியிடுகின்றனர். ஆனால் போட்டி என்பது மகிந்த ராஜபக்ஷவுக்கும், ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலே என்பது யாவரும் அறிந்ததே. 2005 ஆண்டில் தேர்தல் நடைபெறவேண்டும் என்ற அறிவித்தல் வந்தவுடனேயே தேர்தல் பரப்புரைகள் சிறீலங்காவில் தொடங்கித் தற்பொழுது உச்ச நிலையை அடைந்துள்ளது. இது மேலும் தீவிரமடைந்து மிக உச்ச நிலையை எட்டும். தங்கள் அடுத்த ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிக்கச் சிங்கள மக்கள் தயாராகி விட்டனர். மலையகக் கட்சிகளான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும், மலையக மக்கள் முன்னணியும் ஏதோ நிபந்தனைகளுடன் ரணிலை ஆதரிக்க முடிவு செய்துள்ளன.

இதேபோன்று சிறீலங்கா முஸ்லிம் காங்கரஸும், மேல் மாகாணமக்கள் முன்னணியும் ரணிலை ஆதரிக்க முடிவு செய்துள்ளன. ஜே.வி.பியும் , ஹெல உறுமயவும் மகிந்த ராஜ பக்ஷவை ஆதரிக்க ஏற்கனவே ஒப்பந்தம் செய்திருந்ததும் அனைவரும் அறிந்ததே. எனவே தமிழினத்துக்கு எதிரான தீவிர இனவாதக் கருத்துக்கள் சிங்கள மக்கள் முன் வைக்கப்படப் போகின்றன.

சிங்களத்துத் தேர்தல்களம் எப்படி இருக்கின்றது என்று எழுதுவதால் ஏதோ தேர்தலில் அக்கறையுடன் இருப்பதாக நினைக்கக் கூடாது. தமிழ் மக்களின் பிரச்சினையை இந்தத் தேர்தல் தீர்த்து வைக்க மாட்டாது என்ற தமிழீழ மக்களின் உணர்வே எல்லாத் தமிழருள்ளும் இருக்கிறது.



குடாநாட்டில் மண்ணிலே ஜனாதிபதித் தேர்தல் பற்றிய சந்தடி எதனையும் காணமுடியவில்லை. தேர்தல் ஒன்று அதுவும் நிறைவேற்று அதிகாரமுடைய ஐந்தாவது ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தல் நடைபெறப்போவதாக யாராவது குடாநாட்டிற்கு வந்து பார்த்தால் ஆச்சரியப்பட்டே போவார்கள். ஏனெனில், சிங்கள மக்கள் தங்கள் ஆட்சித் தலைவரைத் தெரிவு செய்வதற்காக உற்சாகமாகத் தமது கட்சிகளுக்காகப் பாடு[illegible]கின்றனர். ஆனால் தமிழ் மக்கள் தங்களின் எதிர்கால வாழ்வு சுதந்திரமானதாக அமைய வழி என்ன என்ற ஒரே சிந்தனையுடன் இருக்கிறார்கள்.

இங்கே பச்சையையும் காணவில்லை. நீலத்தையும் காணவில்லை. மக்களின் மனங்களில் தமிழ்த் தேசிய எழுச்சி, பொங்கு தமிழ் எழுச்சி போன்ற சுதந்திர தாகத்தை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகளே மேலோங்கி இருப்பதைக் காணமுடிகின்றது. எனவே தான் தேர்தல் ஒன்று நடப்பதை இங்கு காணமுடியவில்லை. இந்த நிலைமையைச் சர்வதேசம் எவ்வாறு கணக்கெடுக்கப் போகின்றது? என்பதும் ஒரு கேள்வியாகும்.

எனவே தமிழ் மக்கள் தேர்தலில் யாரை ஆதரிப்பார்கள் என்று மண்டையைப் போட்டுக் குழப்பத் தேவையில்லை. இது இன்றுள்ள யாழ்ப்பாணத்து அமைதி உலகத்துக்கு யாழ்ப்பாண மக்களின் நிலையை எடுத்துக் காட்டிக் கொண்டே இருக்கின்றது. இதுதான் வெளிப்படையான நிலையாகும். அப்படியெனில் தமிழ்மக்கள் தேர்தலில் வாக்களிக்கப்போவதில்லையா? தேர்தலைப் புறக்கணிப்பார்களா? என்ற கேள்விகளும் எழும். இதற்கான பதிலைத் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளரின் பதில் தெளிவாக விளக்கியுள்ளது.

'ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சுதந்திரமாக முடிவெடுப்பார்கள். கடந்த காலத்தில் தேர்தல்களின் போது தமிழ் மக்கள் தங்களது அரசியல் அபிலாசைகளை சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அதே போல் ஜனாதிபதித் தேர்தலிலும் எங்கள் மக்கள் தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்துவார்கள். நீண்ட காலமாக இனவன் முறைக்கும், ஒடுக்குமுறைக்கும் முகம் கொடுத்த எம் மக்கள் அரசியல் விழிப்புப் பெற்றவர்களாக இருக்கிறார்கள்.' என்பது தான் அரசியற்துறைப் பொறுப்பாளரின் கருத்தாகும்.

அதாவது தமிழ் மக்கள் சுதந்திரமாக முடிவெடுப்பார்கள் என்பது - தமிழ் மக்களின் சுதந்திரத்துக்கான முடிவாகவே அது இருக்கும் என்று யாழ்ப்பாண மக்கள் தீர்மானித்துவிட்டார்கள். 1977 ஆம் ஆண்டில் தமிழீழத் தனியரசுக்கு ஆணை கொடுத்த மக்கள் கடைசியாக 2004 ஆம் ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அதனை மீண்டும் உறுதிப்படுத்தினர். அதன் பின்பு நடைபெற்ற தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடனத்திலும் பொங்குதமிழ் நிகழ்வுகளிலும் இலட்சக்கணக்காகத் திரண்டு, தங்கள் நிலைப்பாட்டினைச் சர்வதேசத்துக்கும் தெளிவாகக் காட்டி வருகின்றனர். இப்பொழுதும் தமிழ் மக்கள் தங்கள் எதிர்காலத்தை நிர்ணயம் செய்யும் சுயநிர்ணய உரிமையை எவ்வாறு காட்ட முடியுமோ, அவ்வாறே சர்வதேசத்துக்குக் காட்டுவார்கள் இவ்வாறான எண்ண அலைகள் தான் யாழ்ப்பாணத்து மக்களின் நிலையாகும். இதே மனநிலையில் தான் அனைத்துத் தமிழ் மக்களின் உணர்வும் இருக்கும் என்பதில் இரு வேறு கருத்துக்கள் கிடையாது.

இந்த ஒற்றுமை உணர்வைச் சீர்குலைக்கும் வகையிலும், தமிழ் - முஸ்லிம் உறவைப் பிளவுபடுத்தும் வகையிலும் சதிவேலைகள் முடுக்கி விடப்படும். அதுவும் தேர்தல் நெருங்க , நெருங்க இந்தச் சதிவேலைகளும் தீவிரமடையும். சட்டவிரோத ஆயுதக் குழுக்கள், ஆயுதப் படைகளின் உதவியுடன் இந்தத் தீய செயல்களில் இறங்குவார்கள். இவர்களின் முதல் இலக்குத் தமிழ் - முஸ்லிம் மோதலுக்கு வழிகாண்பது அடுத்த இலக்குத் தமது எசமானர்களுக்காகத் தேர்தல் மோசடிகளில் இறங்குவது என்றவாறு அமையும். எது எப்படி இருந்தாலும் தமிழ் மக்கள் தமிழ் - முஸ்லிம் உறவைக் கட்டிக் காத்துத் தங்களது சுதந்திரத்துக்கான தீர்வைத் தேர்தலில் காட்ட வேண்டும் -அது அவர்களின் தேசிய கடமையாகும்.

**பரணி**

---



**கா.நிமலன் - வரணி**

# பாடசாலைகளுக்கான சமூகத் தொடர்புகள் எவ்வாறு பேணப்படவேண்டும்?



ஒரு சமூகத்தினுடைய கலை, கலாசார, பண்பாட்டு அம்சங்களைப் பேணிச்செல்லும் நிறுவனமாக அமைந்து, மனித தன்மை பொருந்திய சமூகத்துக்கு பொருத்தப்பாடுடைய நற்பிரஜைகளை உருவாக்குவது பாடசாலைகளே. இந்தப் பாடசாலைகள் சமூகத்தின் ஓர் உப அங்கமாகும். பாடசாலையும், சமூகமும் ஒரு போதும் ஒன்றையொன்று பிரிந்து வாழ நினைக்கக்கூடாது. இதில் ஏதாவது ஒன்றில் ஏற்படும் வளர்ச்சி/ தொய்வு மற்றையதன் வளர்ச்சி/ தொய்வுக்கு வழிவகுக்கும். எனவே, பாடசாலைசமூக இடைத் தொடர்புகள் எப்போதும் வலுவானதாக இருக்க வேண்டும். பின்வரும் இரண்டு அம்சங்களின் அடிப்படையில் இரண்டுக்கும் இடையேயான தொடர்புகள் ஆராயப்படுகின்றன.

1. சமூகத்திடம் இருந்து பாடசாலை எதிர்பார்த்து நிற்பவை.
2. பாடசாலையிடம் இருந்து சமூகம் எதிர்பார்த்து காத்திருப்பவை.

இதில் முதலாவது அம்சத்தை நோக்குவோமாயின் -

எமது சமுதாய அமைப்பில்கிராமப்புற சமுதாயங்கள், நகர்ப்புற சமுதாயங்கள் என இருவகை சமுதாய அமைப்புகள் காணப்படுகின்றன. இத்தகைய சமுதாய அமைப்புகளைப் பொறுத்து பாடசாலையிடையேயான தொடர்புகளும் வேறுபட்டுக் காணப்படுகின்றன.

நகர்ப்புற சமுதாயத்தை எடுத்துக்கொண்டால் - இந்தப் பிரதேசங்களில் காணப்படும் பாடசாலைகள் மிகப் பெரிய பாடசாலைகளாகவும், சகல வளங்களைக் கொண்டனவாகவும், கல்வியின் உள்[illegible]டு வெளியீட்டு செயற்பாடுகள் மிகவும் உயரிய நிலையிலேயே காணப்படும். இதற்கு முக்கிய காரணம் பாடசாலையின் சகல தேவைகளும் அங்கு நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருப்பதேயாகும். இதற்குக் காரணம் அந்தச் சமூகத்தில் வாழும் மக்களாவர். இவர்களில் கல்வியறிவு, கலை, கலாசார, பண்பாட்டு அம்சங்களில் உயர்ந்த நிலையில் காணப்படுவதால், தமது பிள்ளைகளையும் தம்மைப்போல் வரவேண்டும் என்ற சிந்தனை யுடையவர்களாகக் காணப்படுவார்கள். இதனால் பாடசாலைகளுடன் அடிக்கடி தொடர்பை ஏற்படுத்தி, பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் தொடர்பாக பாடசாலையின் தேவைகளை நிவர்த்தி செய்வதை இலக்காகக் கொண்டிருப்பார்கள். இதனால் பாடசாலையின் நடைமுறைத் தேவைகள், சிக்கல்கள் இலகுவாகத் தீர்க்கப்பட்டுக் கொண்டிருக்கும். இதனால் இங்கு முரண்பாடுகள் தோன்ற வாய்ப்பில்லை. பாடசாலை தனது இலக்கை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கும்.

இத்தகைய நடைமுறை அம்சங்களுக்கு மாறாக, கிராமப்புற பாடசாலைகள் காணப்படுகின்றன. தற்கால சமூகத்தில் கிராமப்புற மக்கள் பாடசாலைகளுடன் தொடர்புகளை வைத்துக் கொள்வதில் தயக்கம் காட்டுகிறார்கள். இவர்கள் பாடசாலைமீது ஏற்படுத்தும் தொடர்புகள், முரண்பாட்டுத் தன்மையுடையதாகக் காணப்படுவதாக யுனிசெப்பின் அறிக்கை ஒன்று தனது அதிர்ச்சியான தகவலை வெளியிட்டுள்ளது.

கிராமப்புற மக்களிடையே காணப்படும் கல்வியறிவின்மை, பொருளாதாரக் கஷ்டம், தனிப்பட்ட குரோத மனப்பாங்குகள், மூடநம்பிக்கைகள், சாதி வேறுபாடுகள், சமூகத்தில் சிலர் உயர்ந்தவர்கள் எனக்கருதி அவர்களின் வழிகாட்டுதல்களைப்பின்பற்றி ஏமாறல் போன்றவற்றால் தாம் பிழையான வழிக்கு இட்டுச் செல்லப்பட்டு, தமது சமூகத்தின் வளர்ச்சிக்கு அவசியமான பாடசாலையையும் தவறான பாதையில் நடத்திச் செல்ல முயல்கிறார்கள்.

இது மட்டுமன்றி தமது பிள்ளைகளையும் படுகுழியில் தள்ளிவிட எத்தனிக்கிறார்கள். பொருளாதாரக் கஷ்டத்தால் சிறுவயதிலேயே தமது ஜீவனோபாய தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துகிறார்கள். பாடசாலைக்கு பிள்ளைகளை அனுப்புவதில் தயக்கம் காட்டுகிறார்கள். பாடசாலைக்கு அனுப்பினாலும், பாடசாலைக்குள் எதிர் விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய நடவடிக்கைகளையே இந்தச் சமூக மக்கள் பிள்ளைகளுக்கு ஊட்டிவருகிறார்கள். இதனால் பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையேயான தொடர்புகள் சீர்குலைக்கப்படுகின்றன. இத்தகைய சம்பவங்கள், எல்லாக் கிராமப் புறத்து சமூகங்களுக்கும் பொருந்த மாட்டாது என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. சில கிராமப்புற சமூகங்கள் பாடசாலையின் வளர்ச்சியிலும், தங்கள் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியிலும் அக்கறையோடு செயற்படுவதை நாம் தற்கால உலகில் அவதானிக்கலாம்.

இங்கு கிராமப்புற பாடசாலைகள், நகர்ப்புறப் பாடசாலைகள் என்று வேறுபடுத்தி நோக்கப் பட்டிருந்தாலும், பாடசாலையின் வளர்ச்சியில் சமூகத்தின் பங்கு ஒரே சம தன்மையானதாகவே காணப்படவேண்டும். பாடசாலையின் தேவைகள், பாடசாலையின் வளர்ச்சி, மாணவர்களின் கல்விமுன்னேற்றம் போன்ற நல்ல விடயங்களுக்காக பாடசாலையோடு - சமூகம் எப்போதும் ஒன்றுபட்டிருக்க வேண்டும். ஒரு சமூகத்தில் காணப்படும் பாடசாலையை, அந்தச் சமூகம் நினைத்தால் உயர்ந்த நிலைக்குக் கொண்டு வரமுடியும் மாறாக குற்றுயிர் நிலைக்குத் தள்ளிவிடவும் முடியும்.

**பாடசாலையிடம் இருந்து சமூகம் எதிர்பார்த்து நிற்பவை**

பாடசாலையிடமிருந்து நல்ல விளைவுகளை எப்போதும் சமூகம் எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கும். நல்ல விளைவுகள் பாடசாலையிடம் இருந்து கிடைக்க வேண்டுமேயானால், முன்பு கூறப்பட்டதைப்போல சமூகத்தின் தொடர்புகள் பாடசாலை மீது அடிக்கடி நல்ல விடயங்களுக்காக ஏற்படுத்தப்படவேண்டும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பாடசாலைக்கு பிள்ளைகள் பல்வேறு இயல்புகளுடன் வருகிறார்கள். அவர்கள் நற்பண்புகளுடன் கல்வியை முறையாகக் கற்று, சமூகத்திலே தலைசிறந்தவர்களாக விளங்க பாடசாலைகள் வழிசமைக்கின்றன என்பதை சமூகத்திலுள்ள அனைவரும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஒரு பாடசாலையானது சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்ய உருவாக்கப்பட்ட நிறுவனமே. பாடசாலையின் அதிபர்கள், ஆசிரியர்கள் சமூகத்தோடு சுமுகமான தொடர்பாடலை வளர்த்துக்கொள்ள வேண்டும். அது மட்டுமன்றி, சமுதாய நலசெயற்திட்டங்களையும், பாடசாலையின் வளங்களையும் சமூகத்தின் தேவைக்காகப் பயன்படுத்த முன்வரவேண்டும். பாடசாலையின் வாயில்களை சமுதாயத்துக்காக திறந்துவிட்டு, அந்த வாயில்களின் வழியாக சமூக இடைத் தொடர்புகளை சுமுகமாக ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஒரு பாடசாலையானது - அயற் சமூகத்துடன் பாடசாலைகள் கொண்டுள்ள தொடர்புகளை நிர்வாகத் தொடர்புகள், அரசியல் தொடர்புகள், சமூகத் தொடர்புகள் என மூன்று வகையாகப் பாகுபடுத்தலாம். இத்தகைய தொடர்புகளிலிருந்து பாடசாலைகள் ஒருபோதும் விலகிச் செல்ல நினைக்கக்கூடாது. பாடசாலையிடமிருந்து சமூகம் எதிர்பார்த்துக் காத்திருக்கும் விளைவுகளை சரியானமுறையில் பாடசாலைகள் நிவர்த்திசெய்ய வேண்டும். இத்தகைய செயற்பாடுகள் சிறப்பாக அமைய ஆசிரியரிடம் சமுதாயம் தொடர்பான விளக்கமும், சமுதாய மக்களிடையே பாடசாலை தொடர்பான விளக்கமும் அவசியம் தேவையானதாகும்.

எனவே, எந்த மனிதனாயினும் தான் வாழும் சமூகத்தின் முன்னேற்றத்தின் ஆதாரத்தரனமான பாடசாலைமீது நல்ல தொடர்புகளை ஏற்படுத்த முனைய வேண்டும். பாடசாலையும் சமூகத்தின் தேவைகளைக் கருத்திற்கொண்டு செயலாற்ற வேண்டும். சமூகம் - படசாலை என்ற இரண்டினதும் வளர்ச்சியையும் சமூக மக்களினதும், பாடசாலையினது அதிபர், ஆசிரியர்களது புரிந்துணர்வின் அடிப்படையிலான இடைத் தொடர்பின் மூலமே ஏற்படுத்திக் கொள்ள முடியும். பாடசாலையும், சமூகமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றன. ஒன்று நிலை பெற மற்றொன்றின் தொடர்பு அவசியமானதாகும் என்பது இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

### பாரிய பூகம்ப அழிவில்

# பாகிஸ்தானில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 38 ஆயிரமென உத்தியோகபூர்வ அறிவிப்பு!



இஸ்லாமாபாத் —

பாகிஸ்தானின் முசாபராபாத் நகரை மையமாகக் கொண்டு கடந்த 8 ஆம் திகதி ஏற்பட்ட பாரிய நில நடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 38 ஆயிரமென பாகிஸ்தான் அரசாங்கம் அறிவித்துள்ளது.

முன்னர் 25 ஆயிரம் என அறிவிக்கப்பட்டதிலிருந்து 13 ஆயிரம் கூடியுள்ளதாகவும், காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 60 ஆயிரமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உயிரிழப்புக்கள் அதிகரிக்கக் காரணம் குக் கிராமங்களிலிருந்தும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பாலகோட் நகரிலிருந்தும் கிடைக்கப்பெற்ற தகவல்களே எனவும், இந்தத் தொகை மேலும் அதிகரிக்கலாமெனவும் பாகிஸ்தான் இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் சவுகத் சுல்தான் தெரிவித்தார்.

இந்தப் பூகம்பத்தால் வீடுகளை இழந்தவர்களின் தொகை 3.3 மில்லியன் என உள்துறை அமைச்சர் அப்ரப் அகமட்கான் தெரிவித்தார்.

பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் நிலவும் குளிர், போஷாக்கின்மை மற்றும் தொற்று நோய்களால் சிறுவர்கள் மரணத்தின் பிடியில் சிக்கியுள்ளதாக யுனிசெப் தெரிவித்துள்ளது.

திறந்த வெளிகளில் சிறுவர்கள் படுத்துறங்குவதால் உயிரிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக சிறுவர் பாதுகாப்பு நிதியம் தெரிவித்துள்ளது.

ஆயிரக்கணக்கான கூடாரங்களும் போர்வைகளும் பெருமளவில் தேவையாக உள்ளதாகவும், பாதிக்கப்பட்ட பல கிராமங்களுக்குச் செல்லும் வீதிகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் அந்தப் பகுதிகளுக்குச் செல்ல முடியாதிருப்பதாகவும் ஒக்ஸ்பாம் தெரிவித்துள்ளது.

பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு பில்லியன் கணக்கில் டொலர் தேவைப்படுவதாக ஐ.நாவின் நிவாரண இணைப்பதிகாரி ஜோன் எக்லன்ட் தெரிவித்தார்.

133 மில்லியன் டொலர் உதவிப் பொருட்களை, பாகிஸ்தானுக்கு வழங்கவுள்ளதாக சவுதி அறிவித்துள்ளது. பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ள தலாய்லாமா, பாகிஸ்தானுக்கு 23 ஆயிரம் அமெரிக்க டொலரும் இந்தியாவுக்கு 12 ஆயிரம் அமெரிக்க டொலரும் வழங்குவதாக உறுதியளித்தார்.

பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக ஆசி வேண்டி சுமார் மூவாயிரம் முஸ்லிம்கள் தலைநகர் இஸ்லாமாபாத்திலுள்ள பள்ளிவாசலில் விசேட தொழுகையை நடத்தியுள்ளனர்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் காலை 2 தடவை காஷ்மீரில் பூகம்பம் ஏற்பட்டது. முதல் பூகம்பம் நள்ளிரவு நேரம் 1.08 மணிக்கு ஏற்பட்டது. சில வினாடிகள் நீடித்த இந்தப் பூகம்பம் 5.4 ரிக்டர் அளவுக்குப் பதிவாகியிருந்தது. அடுத்து காலை 9.55 மணிக்கு ஏற்பட்டது.

இதனால் சேதம் எதுவும் ஏற்பட்டதா என்று தெரியவில்லை. பூகம்பம் ஏற்பட்டதும் மக்கள் அலறியடித்துக் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறினார்கள். மீண்டும் வீட்டுக்குச் செல்லப் பயந்து அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தார்கள்.

இந்திய நிர்வாகத்திற்குட்பட்ட காஷ்மீரில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை இராணுவம் செய்துவருகிறது. இதேவேளை, தீவிரவாதிகள் இராணுவம் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

கதுவா என்ற இடத்தில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டிருந்த ராணுவ வீரர்கள் காலைப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினார்கள். இதில் 2 படையினர் உயிரிழந்தனர். 6 பேர் காயமடைந்தனர். பின்னர் தீவிரவாதிகள் தப்பியோடிவிட்டனர். அந்த இடத்தைப் படையினர் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தியுள்ளனர்.




# பாகிஸ்தானைத் தாக்கவும் அமெரிக்கா திட்டமிட்டதாம்!

### நியூயோர்க் ரைம்ஸ் தகவல்


நியூயோர்க் —

ஈராக் நாட்டுக்குப் பிறகு பாகிஸ்தானைத் தாக்கவும் அமெரிக்க ஜனாதிபதி புஷ் திட்டமிட்டிருந்தார் என்ற பரபரப்புத் தகவலை அமெரிக்கப் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

கடந்த 2003 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி புஷ், இங்கிலாந்து பிரதமர் ரொனி பிளேயருடன் தொலைபேசியில் பேசினார்.

அப்போது புஷ் – "சவூதி, ஈரான், தென்கொரியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் அணு ஆயுதங்களைச் சேகரித்து வருகின்றன. அணு ஆயுத பரவலைத் தடுக்க வேண்டும். ஈராக்கில் அணு ஆயுத சோதனை நடத்திவரும் அதிகாரிகளுடன் தற்போது சதாம் ஒத்துழைக்கிறார் என்ற தகவல் வந்துள்ளது. ஈராக் போருடன் நிறுத்தக் கூடாது அதன்மேலேயும் செல்ல வேண்டும். பாகிஸ்தானையும் தாக்க வேண்டும். அப்போதுதான் அணு ஆயுத பரவலைத் தடுக்க முடியும்" என்று குறிப்பிட்டார்.

ஈராக் மீது மேலும் தடைகளைக் கொண்டுவர ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றலாம் என்று புஷ் கருத்துத் தெரிவித்தார். இதை பிளேயர் ஆதரித்தார்.



பாகிஸ்தான் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதைத் தடுக்க வேண்டும். அது ஒரு பிரச்சினைக்குரிய நாடு என்றும் புஷ் – ரொனி பிளேயரிடம் கூறினார்.

இந்தத் தகவலை ரொனி பிளேயரின் அப்போதைய நேர்முக உதவியாளர் மத்யூ, அவர் எழுதியுள்ள ஒரு புத்தகத்தில் தெரிவித்திருக்கிறார். இது பற்றிய செய்தியை நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை செய்தியாக வெளியிட்டுள்ளது. இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# நிவாரணப் பணியில் ஈடுபட்டிருந்த ஹெலி பாகிஸ்தானில் விழுந்து நொருங்கியது!

### ஆறு படையினர் பலி




இஸ்லாமாபாத் —

பாகிஸ்தானில் கடந்த 8 ஆம் திகதி ஏற்பட்ட பாரிய பூகம்பத்தையடுத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பொருட்களை விநியோகித்துவந்த MI-17 ரக ஹெலிகொப்ரர் ஒன்று நேற்று முன்தினம் விழுந்து விபத்துக்குள்ளானதில் அதிலிருந்த ஆறு பாகிஸ்தான் படையினர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தான் நிர்வாகத்திற்குட்பட்ட காஷ்மீரிலுள்ள பாக் என்னுமிடத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிப் பொருட்களை விநியோகித்துவிட்டு திரும்பிய சற்றுநேரத்தில் இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்து இடம்பெற்றதற்கான உடனடிக் காரணம் எதுவும் தெரியவராதபோதிலும், கடுமையான காற்றும், மழையுடன் கூடிய சீரற்ற காலநிலையுமே இந்த விபத்துக்குக் காரணமென பாகிஸ்தான் இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் சவுகத் சுல்தான் தெரிவித்தார். அத்துடன், சீரற்ற காலநிலை காரணமாக உதவிப் பணிகள் தடைப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிப் பணிகளை – டசினுக்கு மேற்பட்ட பாகிஸ்தான், மற்றும் அமெரிக்கக் ஹெலிகள் மேற்கொண்டுவந்தன. ஆனால், தற்போது நிலவும் மோசமான காலநிலையால் இந்த ஹெலிகளின் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது. காலநிலையில் முன்னேற்றம் ஏற்பட்டால் மாத்திரமே ஹெலிகளின் சேவை மீளத் தொடங்குமென மேஜர் ஜெனரல் சவுகத் சுல்தான் மேலும் தெரிவித்தார்.

# இன்று மாலை சந்திர கிரகணம்



சென்னை —

வழக்கமாக சந்திர கிரகணமும், சூரிய கிரகணமும் குறைந்தது ஆறு மாத இடைவெளியில் வரும். ஆனால், தற்போது ஒரே மாதத்தில் சூரிய, சந்திர கிரகணங்கள் வருவது ஜோதிட, விஞ்ஞான ரீதியாக பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 3 ஆம் திகதி சூரிய கிரகணம் ஏற்பட்டது. இன்று மாலை சந்திர கிரகணம் நிகழவிருக்கிறது. இவ்வாறு இரண்டு கிரகணங்கள் ஒரே மாதத்தில் இதற்கு முன் 180 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்தது. இவ்வாறு ஒரே மாதத்தில் இரண்டு கிரகணங்கள் நிகழ்வதற்கு மலமாத விளைவு என்று கூறுவர். பொதுவாக இந்த மலமாத விளைவு பலநூறு ஆண்டுகளுக்கு ஒரு முறையே நிகழும் அபூர்வ நிகழ்வாகும்.

இன்று சந்திர கிரகணம் – ரேவதி நட்சத்திரத்தில் மீனம், மேஷ ராசியில் 5 ஆவது சாமத்தில் நிகழ்கிறது. இன்று 5.04 மணிக்குத் தொடங்கும் சந்திர கிரகணம் 6.05 மணிக்கு மத்திய நிலையை அடைகிறது. 6.33 மணிக்கு நிறைவுபெறுகிறது. சந்திரனுக்கு உரிய கிழமையான திங்கட்கிழமை இது நிகழ்வது மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

வழக்கமாக கிரகண காலங்களில் கோவில்களில் நடை சாத்துவது வழக்கம். கிரகணத்தின்போது பக்தர்களின் மனநிலை – வழிபாடு செய்வதற்குரிய ஒருமித்த தெய்வீக சிந்தனையை அடைவது கடினம். அவர்களின் மனநிலையில் கிரகண நேரத்தின்போது மாற்றங்கள் ஏற்படும். எனவே, இந்த சூழ்நிலையோடு பக்தர்கள் ஆலயங்களுக்கு வந்து ஆலய சுத்தம் பாதிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்கும், கிரகண கதிர்வீச்சுக்களால் கோவில்களிலுள்ள விக்கிரகங்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்குமாக கிரகண நேரத்தில் கோவில்களில் நடை சாத்தப்பட்டு கிரகணம் முடிந்ததும் அது மீண்டும் திறக்கப்படும்.

அத்துடன், கிரகண காலங்களில் ஆலயங்கள் மிகவும் தூய்மைப்படுத்தப்படுகின்றன. மடப் பள்ளிகளில் உள்ள உணவைக் காலிசெய்து அந்த அறை நன்கு சுத்தப்படுத்தப்பட்டு கிரகணம் முடிந்ததும் புதிதாக அக்னி மூட்டி உணவு தயாரிக்கப்பட்டு நிவேதனத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது.

# தலிபான் பேச்சாளர்களாக மூவர் புதிதாக நியமனம்!

இஸ்லாமாபாத் —

பாகிஸ்தானில் கடந்த வாரம் தலிபான் அமைப்பின் பேச்சாளர் லத்திபுல்லா ஹக்கீமி கைது செய்யப்பட்டதையடுத்து அந்த அமைப்பு மூன்று புதிய பேச்சாளர்களை நியமித்துள்ளது.

ஆப்கானில் தலிபான் ஆட்சி செய்தவேளை, கலாசாரம் மற்றும் தகவல் தொடர்புதுறைக்கு பொறுப்பாக இருந்த அப்துல் ஹாய் முத்மெயின் பி.பி.சிக்குத் தகவல் தருகையில் –

அறிவிக்கப்பட்டுள்ள மூன்று பேச்சாளர்களில் தலைமையாளர் தானே எனவும், மற்றைய இருவரும் குவாரி யூசுப் மற்றும் டொக்டர் ஹனீப் எனவும் தெரிவித்தார்.

தலிபான் தலைவர் ஹிஸ்புல்லா மொகமட் ஓமரினாலேயே தான் நியமிக்கப்பட்டதாகவும் தெரிவித்த அவர், மற்றைய இருவரும் தமது இராணுவ நடவடிக்கை தொடர்பான தகவல்களை ஆப்கானின் வேறுபட்ட இடங்களிலிருந்து வழங்குவார்களெனவும், தான் அரசியல் தொடர்பான தகவல்களை மட்டுமே வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.



பாகிஸ்தானில் பூகம்பம் ஏற்பட்டு 6 நாட்களாக இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த 18 மாதக் குழந்தை மீட்புக் குழுவினரால் உயிருடன் மீட்கப்பட்டது. மீட்கப்பட்ட குழந்தை தனது பெற்றோருடன் இருப்பதைக் காணலாம்.

# பாரிய பூகம்பத்தில் சிக்கி 1500 தீவிரவாதிகள் பலி!

புதுடெல்கி —

கடந்த 8 ஆம் திகதி ஏற்பட்ட பாரிய பூகம்பத்தில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில், ஹிஸ்புல் முஜாகுதீன் மற்றும் லஷ்கர் – இ – தொய்யா அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் உட்பட ஆயிரத்து 500 தீவிரவாதிகள் பலியானதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் பல்வேறு தீவிரவாதக் குழுக்கள் முகாமிட்டிருந்தன. குறிப்பாக, முசாபராபாத் நகரத்தில் தீவிரவாதிகளின் முகாம்கள் அதிகளவில் இயங்கி வந்தன. இங்குதான் பூகம்ப பாதிப்பு அதிகம். இதனால் இவர்களில் பலர் இறந்துபோயிருக்கலாம் என பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது.

பூகம்ப நிவாரணப் பணிகள் குறித்து நேற்றுமுன்தினம் நிருபர்களிடம் பேசிய பாகிஸ்தான் இராணுவ அதிகாரி மதன் கோபால் இது குறித்துக் கூறுகையில்–

எங்களுக்கு வந்த தகவலின்படி ஹிஸ்புல் முஜாகுதீன், லஷ்கர்-இ-தொய்யா தீவிரவாத அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் பலியானதாகத் தெரிகிறது. இறந்தவர்களின் எண்ணிக்கை உறுதியாகத் தெரியவில்லை. ஒருவேளை தீவிரவாதிகள் இதுபோன்ற தகவல்கள் வெளியாகாமல் பார்த்துக்கொள்ளக்கூடும் என்றார். எனினும், பல்வேறு அமைப்புக்களைச் சேர்ந்த ஆயிரத்து 500 க்கும் அதிகமான தீவிரவாதிகள் பலியாகியிருப்பர் என உள்ளூர் வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## விஜேவீர கொலைக்கு உடந்தை

# குணதாச அமரசேகர மீது ஜே.வி.பியினர் குற்றச்சாட்டு!

கொழும்பு—

ஜே.வி.பியை உருவாக்கிய றோகண விஜேவீரவின் கொலைக்கு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் இணைச்செயலர்களில் ஒருவரான குணதாச அமரசேகர உதவி செய்த தாக தகவல் வெளியாகியுள்ளதாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

இந்தத் தகவல்கள் வெளியாகி யுள்ளதைத் தொடர்ந்து மீண்டும் குணதாச அமரசேகரவுடன் அரசியல் நடவடிக்கை மேற்கொள்வதில் சிக்கல் தோன்றியுள்ளதால் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்திலிருந்தும் அதன் அனைத்துப் பதவிகளிலிருந்தும் அவரை விலகிச்செல்லுமாறு கேட்கப் பட்டுள்ளார்.

அவர் அவ்வாறு விலகிச்செல்லா விடின் இயக்கத்திலிருந்து விலக்குவ தற்கான நடவடிக்கை எடுக்குமாறும் ஜே.வி.பி சிரேஷ்ட உறுப்பினர் ஒரு வர் தெரிவித்தார்.

தமது கட்சியின் தலைவரான றோகண விஜேவீரவைக் கொலை செய்யும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அதன் பாதுகாப்பு அமைச் சராக இருந்த ஜெனரல் றஞ்சன் விஜே ரட்ணவுக்கும் தேவையான உதவிக ளைச் செய்த குணதாச அமரசேகர வுடன் தொடர்ந்து நடவடிக்கை மேற் கொள்வது ஜே.வி.பிக்கு உகந்தது அல்ல எனவும் அவர் மேலும் தெரி வித்தார்.

(தே)

# பிரசாரக் கூட்டத்திலிருந்த அனுரா மஹிந்த வரமுன்னரே வெளியேற்றம்!

கொழும்பு—

கம்பகாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட் சியின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத் தில் முதன் முறையாகக் கலந்து கொண்ட வெளிவிவகாரஅமைச்சர் அனுரா பண்டாரநாயக்க - பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூட்டத்திற்கு வர முன்னரே அதிலிருந்து வெளியேறி னார்.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விஜிதஹேரத், லால் காந்த ஆகியோரும் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில் பேசிய அனுரா பண்டாரநாயக்க -

கட்சிக்குள் வேறுபாடுகள் இருந் தாலும் நாங்கள் மஹிந்தவை ஆத ரிக்கிறோம். ஜனாதிபதி சந்திரிகா கேட் டுக்கொண்டதையடுத்தே விடுதலைப் புலிகள் மீதான பயணத்தடையை ஐரோப்பிய யூனியன் விதித்தது என் றும் குறிப்பிட்டார்.

பேச்சை முடித்தவுடனேயே அமைச் சர் அனுரா கூட்டதிலிருந்து வெளியே றிச் சென்றுவிட்டதாகவும் தெரியவரு கிறது.

# தமிழ் எம்.பிக்களை கொல்ல அரசாங்கம் சதி செய்கிறது!

## தமிழ் மக்கள் பேரவை கண்டனம்

திருகோணமலை—

திருகோணமலையில் எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ள தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டில் வைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தனையும், துரைரட்ண சிங்கத்தையும் கொலை செய்ய விடு தலைப் புலிகள் திட்டமிட்டுள்ளதாக வெளியான செய்தியை திருமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை கண் டித்துள்ளது.


இது அரசாங்கத்தின் சதிமுயற்சி யின் வெளிப்பாடாகும்.

அத்துடன், தமிழ்த்தேசிய எழுச்சி நிகழ்வைக் குழப்புவதற்காக படைத் தரப்பு மேற்கொண்டுள்ள உளரீதி யான பயமுறுத்தலே என தாம் இதைக் கருதுவதாகவும் பேரவை கருதுகின் றது.

எனவே, ஊடகத்துறை அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி இந்த விடயத்தில கவனம் செலுத்த வேண் டுமென தமிழ் மக்கள் பேரவை கேட் டுக்கொண்டுள்ளது.

# மாகாணசபையை எதிர்த்த ஜே.வி.பி இன்று அதில் அங்கம் வகிக்கின்றது!

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில்



திருந்தால் சோமவன்ச அமரசிங்கவை மேடையில் இருந்து அகலுமாறு பணித்திருக்க முடியும் என்றும் ரணில் மேலும் குறிப்பிட்டார்.

கொழும்பு—

ஜே.வி.பியின் கருத்துக்களுக்கு மட்டும் செவிசாய்க்கும் - சுயமாக எது வும் செய்யமுடியாத மகிந்த ராஜபக்ஷ வுக்கா அல்லது மக்களின் பிரச்சினை களை மக்களிடமே கேட்டு தீர்வை முன்வைத்துள்ள எனக்கா வாக்களிப் பது என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி யின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

திருகோணமலை நகரில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத் தில் உரையாற்றிய அவர் - மாகாண சபை முறையை எதிர்த்து பல்லாயிரக் கணக்கான உயிர்களையும் கோடிக் கணக்கான சொத்துக்களையும் அழித்த ஜே.வி.பியினர் - இன்று அதே மாகாண சபைகளில் அங்கத்துவம் பெற்றுள்ள னர்.

மாகாண சபைத் திட்டத்தை முன் னர் எதிர்த்தது தவறென்பதை அவர் கள் இப்போது உணர்கின்றனர்.

அதேபோல் - தற்போது ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்துள்ள ஐக் கிய இலங்கைக்குள் தீர்வு என்ற விட யத்தை, அவர்கள் நாட்டுப் பிரிவினை எனக் கூறி எதிர்க்கின்றனர்.

ஆனால், இதனையும் எதிர்காலத் தில் சரி என ஜே.வி.பியினர் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலை உருவாகும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக் களுக்கான நிவாரணங்கள் குறித்த திட்டம் நான் பதவிக்கு வந்து ஒரு வருட காலத்திற்குள் வழங்கப்படும்.

ஜே.வி.பியின் தலைவர் சோம வன்ச அமரசிங்க இராணுவத்திற்கெதி ராக மேடையில் பேசியபோது மகிந்த ராஜபக்ஷ மௌனித்திருந்தமையா னது சோமவன்ச மீது அவருக்கு இருந்த பயத்தையே வெளிப்படுத்து கிறது.

அதுவே எனது மேடையாக இருந்

### ரணிலுடன்...

திருந்தா . அமெரிக்கா மற்றும் வளர்ந்த நாடுகளில் இருப்பதைப் போன்று இரு வேட்பாளர்களும் நேரடி விவா தம் நடத்தவேண்டும்.

இது ஆரோக்கியமான அரசிய லுக்கு வழிவகுக்கும். இதில் தவறே தும் இல்லை. இரு முக்கிய வேட்பா ளர்களும் தெரிவிக்கும் குற்றச்சாட்டுக் களின் உண்மைத்தன்மையை மக் கள் புரிந்துகொள்ள வேண்டும.

தற்போது இருவரும் குற்றஞ்சாட் டப்பட்டவர்களாக இருக்கிறார்கள். தங்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக மக்களுக்கு அவர்கள் விளக்கம் அளிக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

### பொதியேற்றும்...

அனுமதிக்கப்பட்டனர்.

எனினும் 35 வயதான இந்தோ னேசியப் பெண் அங்கு உயிரிழந் தார். 3 அவுஸ்ரேலியர்களும் ஒரு இந்தியரும் ஒரு இலங்கையரும் படு காயமுற்ற நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்கள் ஆபத்தான கட்டத்தைத் தாண்டிவிட்டதாக விமான நிலையப் பேச்சாளர் சந்தன டி சில்வா தெரிவித் தார். ட்ரக்கின் சாரதியை பொலிஸார் கைதுசெய்து தடுத்துவைத்துள்ளனர்.

### கொள்ளுப்பிட்டி...

கண்டனப் பேரணி நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. மேயர் மற் றும் பிரதமரிடம் இது தொடர்பாக நட வடிக்கை எடுக்க வலியுறுத்தியதுடன் முஸ்லிம் கட்சிகள் மற்றும் முஸ்லிம் அமைச்சர் களிடமும் இது தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தற் போது சட்டரீதியான நடவடிக்கை மேற் கொள்ளப்படவிருப்பதாகவும் தெரிய வருகிறது.

# தமிழரின் அரசியல் அபிலாசைகளை போர்நிறுத்தம் தீர்க்கவில்லை!

## இரா. சம்பந்தன் எம்.பி

கொழும்பு—

இலங்கையில் நான்கு ஆண்டு காலமாக நீடித்து வரும் போர் நிறுத்த ஒப்பந்தத்தால் தமிழ் மக்களின் அரசி யல் அபிலாசைகள் நிறைவேறவில்லை என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப் பின் தலைவரும் திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலையில் எதிர்வரும் ஒக்ரோபர் 22 ஆம் திகதி தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடன நிகழ்வு நடைபெற வுள்ளது.

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் மாலை திருமலை விக்னேஸ்வரா மகாவித்தி யாலயத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசிய இரா.சம்பந்தன் - தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு வடக்கு- கிழக்குக்கான சுயாட்சி அதிகாரங்க ளுடன் கூடிய அரசியல் தீர்வு காணப் படவேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை சர்வதேச சமூகம் அங்கீகரிக்கவேண்டும்.

திருமலை தமிழ்த் தேசிய எழுச் சிப் பிரகடன நிகழ்வைச் சீர்குலைக் கும் வகையில் பேரினவாத சக்திகள் உருவாக்கிவிடும் வதந்திகள் தொடர் பாக தமிழ் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று வேண்டு கோள்விடுத்தார்.

# முஸ்லிம் காங்கிரசில் இணைய பைசல் முஸ்தபா திட்டம்!

கொழும்பு—

பிரதி அமைச்சரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் துணைத் தலைவருமான பைசல் முஸ்தபா விரைவில் சிறிலங்கா முஸ்லிம் காங் கிரஸில் இணைவார் என்று தெரிவிக் கப்படுகிறது.

ரணில் விக்கிரமசிங்கவை ஆத ரிக்க தொழிலாளர் காங்கிரஸ் முடிவு மேற்கொண்ட நிலையில் அந்தக் கட் சியின் அமைச்சர்கள் இருவர் அரசாங் கத்திலிருந்து விலகினர். ஆனால், பைசல் முஸ்தபா பதவி விலக மறுத்து விட்டார்.

இந்த நிலையில் தற்போது தோட்டத் தொழிலாளர் காங்கிரஸிலி ருந்து விலகி முஸ்லிம் காங்கிரஸில் இணைய உள்ளதாகவும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் பைசல் முஸ்தபா போட் டியிடத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிகி றது.

இது தொடர்பாக பைசால் முஸ் தபா உத்தியோகபூர்வ அறிவிப்பு எத னையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### தேர்தல்...

அறிவித்திருந்தார்.

எனினும், இறுதி நேரத்தில் யாவும் இடைநிறுத்தப்பட்டு நாளையே வெளி யிடப்படவுள்ளது என அறிவிக்கப்பட் டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் செவ் வாய்க்கிழமை வவுனியாவில் நடை பெறவிருக்கும் தேர்தல் பிரசாரக்கூட் டத்தில் மகிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ளமாட்டாரென அறிவிக்கப்பட் டுள்ளது. மகிந்தவுக்கு பதில் அரச அமைச்சர்கள் சிலரே அதில் கலந்து கொள்வார்கள் என தெரிவிக்கப்படுகி றது.

இது தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிச் செயலாளர் சுசில் பிரேம் ஜயந்த கூறியதாவது -

நேற்று ஞாயிறு, இன்று போயா தினம் என விடுமுறை நாட்கள் தொடர்ச்சியாக இருப்பதால் தேர்தல் அறிக்கை வெளியீட்டு நிகழ்ச்சிக்கும் போதிய முக்கியத்துவம் கிடைக்காது. எனவே, நாளை நிகழ்ச்சிகளை ஒத்திவைத்திருக்கிறோம்.

ஜே.வி.பி, ஜாதிகஹெல உறுமய ஆகிய கட்சிகளின் கொள்கைகளின் உள்ளடக்கத்துடன் சுதந்திரக் கட்சி யின் கொள்கைகளுக்குப் பாதிப்புகள் இன்றி தேர்தல் அறிக்கை உருவாக் கப்பட்டுள்ளது.

'நாட்டை முன்னோக்கி' திட்டத்தை அடிப்படையாகக் கொண்டே இந்த அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினை தொடர்பாக இலங்கையில் அனைத்து தரப்பினரி டமும் இணக்கத்தை உருவாக்கி, நேரடி சமாதானப் பேச்சுக்கள் தொடங் கப்படும் என்று மஹிந்தவின் தேர் தல் அறிக்கை தெரிவிக்கிறது.

பேச்சுவார்த்தை மேசையிலேயே இனநெருக்கடிக்கு ஒற்றையாட்சி முறையிலா அல்லது கூட்டாட்சிமுறை யிலா தீர்வு காணப்படவேண்டுமென்ற முடிவுக்கு வரமுடியுமென சுசில் பிரேம் ஜயந்த மேலும் தெரிவித்தார்.

### கொழும்பு...

வெடிமருந்தால் உருவாக்கப்பட்ட தெனவும் - இதனுடன் டெரனேற்றர், 50 மீற்றர் வயர், சைக்கிள் போல்ஸ் என்பனவும் கண்டுபிடிக்கப்பட்டதாக வும் பொலிஸார் தெரிவித்தனர்.

மிகவும் சக்திவாய்ந்த இந்தக் குண்டு - அரசியல் படுகொலை ஒன் றுக்காக கொண்டு வரப்பட்டிருக்க லாம் எனவும் பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து மோதர பகுதியில் பொலிஸாரும் இராணுவத் தினரும் வீடு வீடாகத் தேடுதல் நடவ டிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

### நு.அ எம்.பிக்கள்...

விக்கிரமசிங்கவுடன் பலகட்டப் பேச்சுக்களை இவர்கள் நடத்தியுள்ள துடன் சமரச நிலைக்கும் வந்துள்ளனர்.

ஹூசைன் பைலா, ரிசாட் பதியு தீன், அன்வர் இஸ்மைல், நஜீப் மஜீத் ஆகியோரே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து விலகி ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்துகொள்ள தீர்மானித்தவர்களாவர். (தே)

# மகிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில்...

கருத்துக் கணிப்பின் மூலமே ஏற் படுத்தப்படும்.

விடுதலைப் புலிகளுடன் நேரடி யாகப் பேச்சுக்கள் நடத்தப்படும். குறிப்பாக விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் பேச்சு நடத்தவேண்டியுள்ளது. வெளிப்படை யான நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விடுத லைப் புலிகள் தமது தனிநாட்டுக் கோரிக்கையையும், ஆயுதங்களை யும் கைவிட்டு ஜனநாயக நீரோட் டத்தினுள் பிரவேசிப்பதன் மூலம் இனப்பிரச்சினைக்கு இறுதித்தீர்வு காணப்படும்.

சுனாமி நிவாரண சபைக்குப் பதிலாக ஜயலங்கா எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வடக்கு - கிழக்குப் பிரதேசங்கள் மீளக்கட்டியெழுப்பப் படும். இந்தத் திட்டத்தில் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்களின் பிரதிநிதிகள் மற்றும் மக்க ளால் செயற்படுத்தப்படும் நிறுவனங் கள் இணைக்கப்படும்.

விடுதலைப் புலிகளுக்கு ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவை நிர்ணயித்து ஒரு குறிப்பிட்ட செயற்திட்டம் கைய ளிக்கப்படும். இதன்மூலம் நடத்தப் படும் பேச்சுவார்த்தைகள் வெற்றிய ளிக்குமாகவிருந்தால், புதிய அரசியல் யாப்புத் திருத்தம் தொடர்பாக அரசி யல் யாப்புக்குழு ஒன்று அமைக்கப் படும்.

இந்தக்குழுவில் எதிர்க்கட்சிக் கும் இடமளிக்கப்படும். இந்தப் புதிய அரசி யல் யாப்பு பொதுமக்களின் கருத்துக் கணிப்புக்கு விடப்படும்.

தற்போது நடைமுறையில் உள்ள போர்நிறுத்த உடன்படிக்கை மனு பரிசீலனை செய்யப்படும்.

அத்துடன் போர்நிறுத்த உடன் படிக்கையின் முன்னேற்றம் குறித்து பிராந்திய ரீதியில் கண்காணிக்கப்படு வதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும்.

வெளியுறவுக் கொள்கை சமனா னதாகக் கடைப்பிடிக்கப்படும். இது தொடர்பாக இந்தியாவுடன் கலந்து ரையாடுவதற்கு முன்னுரிமை அளிக் கப்படும்.

அத்துடன், சீனா, பாகிஸ்தான் மற் றும் ரஷ்யாவுடன் உறவுகள் வலுப் படுத்தப்படும், அமெரிக்கா, ஐரோப் பிய யூனியன், ஜப்பான் மற்றும் நோர்வே ஆகிய நாடுகளுடன் வெளிப் படையான கலந்துரையாடல்கள் நடத்தப்படும்.

நாட்டின் சுதந்திரம் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டை பாதுகாப்பதற்கு தேசிய ரீதியில் புதிய கொள்கை யொன்று வகுக்கப்படும். படையினரை உளரீதியாக வலுப்படுத்த நடவ டிக்கை எடுப்பதுடன், சிறந்த பயிற்சி அவர்களுக்கு வழங்கப்பட்டு நல்லொ ழுக்கம் உடையவர்களாக கட்டுக் கோப்பு பேணப்படும் நடைமுறைக் குத் தேவையான பயிற்சிகள் படை யினருக்கு வழங்கப்படுவதுடன். பாது காப்புப் படையினருக்கான கற்றுலுக் கான பல்கலைக்கழகம் ஒன்று அமைக் கப்படும்.

ரணவிரு கமண திட்டத்தின் மூலம் படையினருக்கு 50 ஆயிரம் வீடுகள் கட்டிக்கொடுக்கபடும். அத்துடன், படையினரின் பிரச்சினைகளைக் கண் டறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கு குழு வொன்று நியமிக்கப்படும்.

1977 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஐ.தே.கட்சி அரசாங்கம் முறை யற்ற வெளிநாட்டுக் கொள்கைகளின் மூலம் எமது பிரச்சினையில் தேவை யற்ற விதத்தில் வெளிநாடுகளைத் தலையிட வைத்தது.

ஆனால், தற்போதும் ஐக்கிய தேசிய முன்னணி அதே கொள்கை யையே கடைப்பிடிக்கின்றது எனக் குறிப்பிட்டிருக்கின்ற மகிந்த ராஜபக்ஷ வின் தேர்தல் அறிக்கை லண்டனி லுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவுக்கு கடந்த வெள்ளிக்கிழமை அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 17.10.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




A/L பெறுபேறும் வெளியாகியது. ஒரு விதத்தில் அது அவனுக்கு அதிர்ச்சியும் தான். கற்பனை பண்ணுவதிலும், கனவு காண்பதிலும் அவனை வெல்ல யாராலும் முடியாது. அந்த

சொல்லிப் படிச்சு கிழிச்சுவிட்டாய்'' என்று கூறியவர்களும் உண்டு. அவற்றையெல்லாம் சகித்துக்கொண்டான். அவன் உண்மையிலேயே சரியான கோபசுபாவம் உள்ளவன். அந்த இடத்தில் கோபப்பட்டால் தன்னை

வழியைக் காட்டப்போகிறார்கள்? சனம் ஆயிரம் கதை சொல்லும். இண்டைக்கு இப்பிடிச் சொலலுறதுகள் நாளைக்கே நான பெரிய ஆளாக வந்திட்டால் தூக்கிக் கொண்டாடும். இனி ஊர், உறவு, சனத்தைப்பற்றி யோசிக்கிறதில்லை என முடிவு பண்ணினான்.

முழுப்பிழையையும் தன் தலையிலேயே போட்டுக்கொண்டான். தான் முதல் தடவையிலேயே பல்கலைக்கழகம் செல்லாததற்குக் காரணம் தன்னுடைய மமதை எனவும், அதாவது தனக்கு எல்லாம் தெரியும். பரீட்சையில் என்ன கேள்வி வந்தாலும் எழுதுவேன். என நினைத்துக்கொண்டான். கூடுதலாக அவன அறிவுக்குப் படித்தானே ஒழிய பரீட்சை எழுதவேணும், அதற்கு எப்படி விடை எழுதுவது, எவ்வாறான வினாக்கள் வரும். தான் எதைப் படிக்க வேணும், என்கின்ற ஒரு முறையை அவன் கையாளவில்லை... தான கெட்டிக் காரன் தானே என நினைத்துக் கொண்டான்.

இனி எல்லாவற்றையும் மறந்துதான் புதிதாக A/L படிக்கப் போகிறேன், அக்கறையுடன் கவனமாகப் படிப்பேன், என் இலட்சியம் நிறைவேறும் என்கிற வெறியோடு படிக கலாமென ஆயத்தமானான். அவனுடைய வீட்டில் அவன் விளக்கில்தான் படிப்பான். அங்கே மின்சாரம் இல்லை. அவனுடைய வீட்டு பொருளாதார நிலை அப்படி. கஷ்டத்தின் மத்தியில்தான் அவர்கள் படிக்

துக்காக ஏதோ கடன்பட்டு ஒரு மாதிரி வீட்டுக்கு ஓடு போட்டுவிட்டார்கள். அந்த ஓடு போட்ட காலமும், அவனுடைய பரீட்சைக்கு கொஞ்சநாள் முன்னால்தான். வீட்டில் வேலை நடக்க பக்கத்து வீட்டில்தான் படிப்பான்.

எல்லாம் நடந்து முடிந்துவிட்டது. அவன் மீண்டும் படிக்க புத்தகங்களை மேசையில் அடுக்கினான். அவன் வீட்டு மேசை விளக்கு "சிமிலி'' எப்போவோ உடைந்துவிட்டது. இதுவரை நாளும் அது தேவையில்லை. ஆனால், இனி அது தேவை. சிமிலி எடுக்கும்வரை அரிக்கன் லாம்பில் படித்தான். அந்தச் சிமிலிக்கும் நிறைய காயங்கள். பேப்பரால் அம்மா மருந்து கட்டிவிட்டிருந்தாள். மேசை விளக்குச சிமிலி எடுத்துத்தரும்படி வீட்டாரிடம் கேட்டான்.

அடுத்தநாள் தாய் வந்து சொன்னாள் "உந்தக் கடையிலை சிமிலி இல்லையாம். நெல்லியடியிலைதான் குடுத்துவிட்டு எடுக்க வேணும்'' என்று. அதற்கு தகப்பன் "உந்தப் பெரிய கடையிலை சிமிலி இல்லையோ?' அதற்கு

# விளக்கு

அம்மன்

வகையில் அவன் அப்துல் கலாமுடைய கொள்கையைப் பின்பற்றுபவன். அவன் இருப்பது ஒரு சின்ன வட்டத்துக்குள். ஆனால் அவன் எதிர்காலத்தில் தன்னை ஒரு பெரிய ஆளாகவே கற்பனை செய்து கொண்டிருந்தான். முதற் தடவையிலேயே பல்கலைக்கழகம் கிடைக்கும் என்ற கனவோடு இருந்தான்.

யாராவது "சோதினை எப்பிடியடா தம்பி'' என்று கேட்கும்போதெல்லாம் "பரவாயில்லை செய்தேன்'' என்று பெருமிதமாகக் கூறுவான். ஏனென்றால் அவனுக்கு தான் நன்றாகப் படித்ததாகவும், பரீட்சை நன்றாக எழுதியதாகவும்தான் இருந்தது. அப்படி நினைத்தவனுக்கு ஏமாற்றம்தான். வந்த பெறுபேறு 2C, S அதையும் சிரிப்போடு ஏற்றுக்கொண்டான். அவனுக்குள் சரியான நெருடல்தான். ஆனாலும் அவன் அதை வெளியே காடடிக் கொள்ளவில்லை. ஏனென்றால் தன்னைத்தானே பல வீனப்படுத்தி மற்றவர்களின் அனுதாப வார்த்தைகளை ஏற்றுக்கொள்ள அவனால் முடியாது. நிறையப்பேரின் எதிர்பார்ப்பு ஒரு நிமிசத்தில் மறைந்தது.

ஒவ்வொருத்தரையும் பார்க குமபோது ஒரு குற்ற உணர்வு அவனை திணறவைத்தது. ஒருத்தரும் செய்யாத பெரிய தவறை தான் செய்து விட்டேனோ என்று அல்லாடினான்.

தெரிந்தவர்கள் எல்லோரும் பெறுபேறு என்ன என்று கேட்டபோது, எந்தவித ஒழிவு மறைவுமில்லாமல் அப்படியே சொன்னான். சிலர அக்கறையுடன் விசாரித்தார்கள். சிலர் அவனுடைய பெறுபேறு தெரிந்துகொண்டே குத்திக் காட்டுவதற்காக கேட்டார்கள். அக்கறையுடன் விசாரித்த ஓரிரு பேருக்கு தன் நிலைப் பாட்டைச் சொன்னான். கவலையும் பட்டான்.

மற்றையவர்களுக்கு நிசல்ற றைச் சொல்லிவிட்டு அவர்களுக்கு முன்னாலேயே தான் முந்திக்கொண்டு ''காணாது அடுத்தமுறை எடுக்கவேணும்'' என்று சொன்னான். சிலர் அவனை வெறுமையான பார்வையாலும் வதைத்தார்கள். அது சிலவேளைகளில் அவனுடைய மன உறுத்தலோ அல்லது தாழ்வுணர்ச்சியாகக்கூடவோ இருக்கலாம். ஆனால் "நெடுக படிப்பு படிப்பு எண்டு

அந்த நேரத்தில் இன்னும் மற்றவர் முன்னிலையில் பலவீனப் படுத்திவிடும் என்பதால் பொறுமையாக இருந்தான். அவர்களுடைய இவ்வாறான வார்த்தைகள் அவனைப் பெரிதும் பாதித்தன. தற்கொலை முடிவுக்குப் போவதற்கு அவன் ஒன்றும் படித்த முட்டாள் இல்லை.

தான் இலட்சியத்தில் தோற்றுப்போய் விடுவேனோ? எனப் பயந்தான். மறுகணமே அதை

## சிறுகதை



விலக்கிக்கொண்டான். சீ... அப்பிடி ஒரு எண்ணமே வரக்கூடாது என தன்னைத்தானே நொந்து கொண்டான். குடும்பத்தவர்களைப பார்க்கும்போது மனவுறுத்தலால் அவஸ்தைப்பட்டான்.

அவர்களை ஏமாற்றிவிட்டேனோ? என எண்ணினான். தன் தகப்பனுடன் தன்னைப்பற்றிக் கதைத்தான். அப்போது அவர் கூறினார்.

"வாழ்க்கையிலை விழுகிறது எழும்புறதுக்குத்தான். அப்பிடியே படுத்துக்கிடக்குறதுக் கில்லை'' என்றார். அப்பொழுது தான் அவன் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டான். வாழ்க்கையில் உயர்ச்சி - வீழ்ச்சி, வெற்றி - தோல்வி எல்லாமே சகஜம். அப்படி இருக்கும்போது தனக்கு ஏற்பட்டது ஒரு சறுக்கலே என்பதைப் புரிந்துகொண்டான்.

நான் எதற்காக மற்றையவர்களுடைய பார்வைக்காகவும், கதைகளுக்காகவும், ஏச்சுக்காகவும் பயப்படவேண்டும். அவர்களா நாளைக்கு எனக்கு ஒரு நல்ல

கிறார்கள். அவர்களுடைய கிராமத்திலே எல்லாருடைய வீடுகளும் நகரங்களில் உள்ளது போல் போட்டி போட்டுக் கொண்டு பெரிய கட்டடங்கள் ஆகிவிடடன. ஆனால், அவனுடைய வீடும், இன்னும் ஒன்று, இரண்டு பேரினுடைய வீடுகளும்தான் அவ்வாறில்லை.

இனிமேல் காலத்தில் வீடு வேய்வதற்கு கிடுகுகளும் கிடைக்காது. அதேநேரம் ஒவ்வொரு வருஷமும் வேய்வதற்கு கூலி ஆட்களும் கிடைக்கமாட்டார்கள்.

இல்லை... இல்லை... அவனுடைய வீடு ஒவ்வொரு வருடமும் வேய்வதில்லை. வீட்டுக்குள் இருந்தபடியே நட்சத்திரங்களை இரசிக்கக்கூடியவாறு வந்த பிறகுதான் வேய்வார்கள். மழை நாட்கள் என்றால் அவர்கள்பாடு திண்டாட்டம்தான். உடுப்புகளை ஒழுக்கில்லாத இடத்தில் ஒதுக்கிவிட்டு, பக்கத்து வீட்டு மாமா வீட்டுக்கு ஓடுவார்கள். அங்கே தான் படுக்கை. இந்தக் கஷ்டத்

அவன் சொனனான் "அப்பா இருக்காதுதான்''

ஏனெண்டா எல்லா வீட்டிலையும் இப்ப "கறன்ற்'' இருக்கு. ஆர் விளக்குக் கொளுத்துவார்கள்.

தகப்பன் தன் நிலைமையை உணர்ந்தவராய் "அது சரி நாங்கள்தான் இன்னும் கற்காலத்திலேயே இருக்கிறம்'' என்றார்.

மின்சாரம், வீடு என்பது பற்றியெல்லாம் அவன் பெரிதும் அலட்டிக்கொள்வதில்லை. ஏனென்றால் தன் குடும்பநிலை அவனுக்கு நன்கு தெரியும். இருக்கிறதை வைத்து சந்தோஷப்படத் தெரிந்தவன் அவன். "காலம் வரும்போது எல்லாம் கூடிவரும்'' என்ற யதார்த்தம் புரிந்தவன் அவன். ஆனாலும், ஒன்றை நினைத்து அவன் பிரமித்துப் போனான்.

கடையிலை சிமிலி இல்லையெண்டா?? ஒரு குறுகிய காலத்திலேயே எங்களுடைய பாரம்பரியமான "விளக்கு'' என்கிற ஒரு பொருள் இல்லாமலே போய் விடும் என நினைத்தான். அவனுள் அது ஒரு நெருடலும்கூட. அவன் புதுமையை ஏற்கமறுப்பவன் அல்ல. அதேநேரம், பழைமையை மறக்க விரும்புபவனும் அல்ல.

"சரி எங்கடை வீட்டுக்கு கறன்ற் வரும்வரை கைவிளக்காவது வீட்டிலை இருக்குதுதானை. நான் அதிலேயே படிச்சுக்கொள்வேன்'' என தனக்குத்தானே சொல்லிக்கொண்டான்.

## தமிழர் உணர்வுகளுக்குள் இறையானது

அகிலத்தில் உயிர் தோன்றி
அசைவுகளால் உணர்வு சொன்ன
அக்கணத்தில் கருவானது – அவள்
ஆசையுடன் ஓசை கொண்டு
ஆ.... என்று சொன்ன அந்த
ஒரு கணத்தில் உயிர் கொண்டது.

அகரத்தை முதல் கொண்டு
உயிர் என்றும் மெய்யென்றும்
புணர்ந்ததால் மொழியானது – இன்று
அவனியிலே பேசுகின்ற
அனைத்து மொழிகளுக்கும்
அன்னையாய் நிற்கிறது; எங்கள்
தமிழ்
அன்னையாய் நிற்கின்றது.
உயிரிலும் மேலானது; தமிழர்
உணர்வுகளுள் இறையானது.

இலக்கணத்தின் வரையறைக்குள்
இலக்கியத்தால் வளம் கண்ட
மொழிகளுக்கு முதலானது –
எங்கள் தமிழ்



அவைகளுக்கு துணை நின்றது.
வல்லினம் மெல்லினம்
இடையினம் என்றபடி
எழுத்துக்கு வகை கண்டது – இன்பத்
தமிழ் என்று பெயர் கொண்டது.

பெயர் என்றும் வினை யென்றும்
இடையுரி நனி யென்றும்
சொற்களுக்கு பெயர் கண்டது –
இதனால்
தேமதுரத் தமிழானது.
அன்னையாய் நிற்கிறது; எங்கள்
தமிழ்
அவனியில் உயர்வானது.
வோல்காவில் முடிகொண்டு
கங்கைக் கரை வந்த
கன்னியர்கள் தந்த தமிழ்

தொல்காப்பியர் தொட்டு வள்ளுவர்
வழிவந்த
நல்லோர்கள் காத்த தமிழ் – ஈழ
நல்லை நகர் நாவலரால்
தொல்லைகளின் மத்தியிலே
தூக்கிவைத்த தெங்கள் தமிழ் –
இன்று
கரிகாலன் சேனைகள் உயிராயுதம்
கொண்டு
உலகத்தே உரைத்த தமிழ்
உயிரினும் மேலானது – தமிழர்
உணர்வுகளில் இறையானது.

எஸ்.விஜி

## மாத்திரைக் கதை

# விதைகள்



வெயிலில் நெடுந்தூரம் பறந்து வந்த நாடோடிப் பறவைகள் முகில்களின் இடையே நுழைந்த போது குளிரில் நனைந்து கழித்தன.

கொஞ்ச நேரத்தில் மழைத் துளிகளாக முகிற்கூட்டம் கீழே விழத்தொடங்கியது.

ஐயோ! நல்ல முகில்கள் விழுகின்றனவே..., என்று இரங்கி அழுதது ஒரு பறவை.

வழிகாட்டிப் பறவையோ எல்லாம் நன்மைக்கே, என்றது.

குளங்கள் நிரம்பும் - நாம் மீன்கள் பிடிக்கலாம். மரங்கள் தழைக்கும் - நாம் கூடுகள் கட்டலாம்.

அது சொன்னது -
நல்லவர்கள்
எழுந்தாலும் நன்மைக்கே, விழுந்தாலும் நன்மைக்கே.

கவிஞர் காசி. ஆனந்தன்

*தப்புத் தட்டும் போதே தட்டுகிறேன்*
*உடல் முழுவதும் தட்டுவதற்கேற்ப*
*அசைந்து இசைந்து கொடுப்பதைக் காணலாம்.*
*பண்படுத்தப்பட்ட இசையும் ஒரு வகை*
*நளினப்படுத்தப்பட்ட லயம். கவிதையும்*
*லயப்படுத்தப்பட்ட சொற்களே.*
*இந்த லய வழி இன்பம்*
*இயற்கையின் பாற்பட்டது.*

**-பூ.ஆர்.குப்புசாமி.**

இனிமையான ஓசைகளுக்குரிய லயம் தமிழிலேயே அமைந்தது. அந்த லயம் மென்மேலும் மெருகு கூடிக்கொண்டே செல்கிறது. இயற்கையோடு பிறந்த இசையை தமிழ் தானெடுத்து தன்னோட வளர்த்தது. இசைக்குரிய லயம் தமிழில் இருந்தது இருப்பது. எனவே தமிழ் இசை மொழி.

இயற்கையை நேசித்த பூர்வக்குடியின் சிந்தனைகளில் அன்றாட வாழ்வின் இயங்குதல்களில் அவனின் தாய் மொழி லயம் கூட்டியது. பூர்வக்குடியின் மன அசைவுகளிலும், உடல் அசைவுகளிலும் நளினமேற்படுத்திய அவன் தாய் மொழி உலக மொழிகளில் அழகு வாய்ந்த இனிமை மொழியாகத்

களே மாவீரர்களுக்கு மாலையாக மாவீரம் எய்தும் வரலாற்றைப் படைத்தவன் எம்தலைவன்.

தாய்மொழி தரும் பாடலை, இசையைக் கொல்ல முடிந்தவன் எவனுமல்ல. உயிர்ப்புள்ள தாய் மொழியின் பாடல் எம் கண்மணிக்குள் நெஞ்சுரம் பற்றியிருக்கிறது.

அவன் எழுந்த நாளிலிருந்து சூரியன் அவன் சொல், பேச்சு கேட்கிறது. சூரியப்பந்தை தீ நார்களாய் பிரித்தெடுக்கிற அவன் கண்மணிகளின் உடல் வரிகளாக்கி நெருப்புப் புலிப்படையை நிறுவி வைத்து தரணி வியக்க வைக்கிறான் பிரபாகரன். அவன் உயிர்ப்புள்ள தாய் மொழியின், தாய் மண்ணின் தலையாய மைந்தன்.

*இந்தப் பூமியே எரிகின்ற பிணமாகி*
*தீ நிழல் விழுந்த*
*எதிர்காலம்*
*பாம்பு உதிர்த்துப் போன செட்டை*
*மினுங்கலென*
*மொட்டை மரத்தடியில்*
*கூன் விழுந்த மானுடம்*
*குந்தியிருக்கிறது.*

**-சு.வில்வரத்தினம்.**

பூர்வீககுடியின் வழிவந்த கடைசித் தமிழன், கூன் விழுந்த எலும்புக்கூடாய் குந்தியிருக்கிறான். அவன் காலடியில் நீண்டு உரிந்து கிடக்கும் நாகத்தின் தோல்

# என் வேர்கள் என்றும் புலம்பெயர்வதில்லை என் தாய்மொழி இருக்கும்வரை

தான் மட்டும் கோலோச்சுகிறது.

வேட்டையாடுகையில் - ஓய்வின் பொழுதின்பத்தால் அவன் நடன அசைவுகளை இசைத்துக் கொண்டே வெளிப்படுத்துகையில் தசைகளோடு லயம் வெளிப்பட்டது. அது அவன் தாய்மொழி அவனுக்களித்த கொடை. பறையிசைப்பதில் சிந்தனையின் ஒழுங்கு, அது வெளிப்படுத்தும் கற்பனை, அதற்கொப்பாகவே அசையும் உடல் தசை



கள், அசைவுகளை நடனப்படுத்தும், ஒருமுகப்படுத்தலின் கூர்மை தாளத்தை புரட்டும் நடனம் யாவும் பூர்வக்குடிக்கு தாய் மொழியின் பரிசுகள்.

தமிழின் எழுத்து வடிவம். அதாவது அதன் நெளிவு, சுழிவுகள் மேலும் அதை எழுதுகின்ற போது மொழிக்கொப்பாகவே வளைந்து, அசையும் சிந்தனையாவும், நடன அசைவுகளையும் அவற்றைக் கட்டமைக்கிற கற்பனையையும் குறித்துக் காட்டுகிறது.

பூர்வ குடித்தமிழரின் தாய் மொழி எழுத்தசைவு லயப்படுத்தப்பட்ட இயற்கையின் வரம். இயற்கையின் லயம் தமிழரின் தாய் மொழிக்குள் அடைந்து விட்டது. அந்த லய வழி இன்பம் தமிழ்ப் பூர்வகுடியின் தாய்மொழியால் பெறுவது.

*பூக்களைப் பிய்த்தும்*
*பட்சிகளை வேட்டையாடியும்*
*ஒரு சூரிய உதயத்தைத் தடுத்தும்*
*உயிர்ப்புள்ள தாய் மொழியின்*
*பாடலைக் கொன்றும்....*
*எங்களில் யார்....?*
*எங்களில் யார்....?*
*எப்போது எழுவார்கள்.*

**- சுபா.**

ஒருவர் அன்றே தோன்றிவிட்டார். எதிரிகளின் பாவங்களைச் சுமப்பதற்கல்ல, உயிர்ப்புள்ள தாய்மொழியில் தெருப் பாடல்கள் மட்டுமல்லாது, தாய் மொழியில் எங்கள் மண்ணுக்கான தேசியப் பாடலையும் கேட்குமாறுசெய்ய அவன், அந்த ஒருவன் எங்களில் ஏற்கனவே தோன்றி விட்டான்.

அவன் பின்னே ஓயாத அலைகளாக எம்மவரும் எழுந்துவிட்டார். அவன் பார்வையைத் திருப்புகிற திசைகளில் எதிரிகள் பொசுங்குகின்றனர். அவனேநிறந்தர சூரியன். உயிர்களை எம் தமிழ்த்தாய் மண்ணின் சூழலை உயிர்ப்பிக்கின்றவன். அவனே சூரியன். பிரபஞ்சக் கோள்களைப் போல் எம் மக்களை ஈர்த்து இயங்க வைத்திருக்கிறவன். திசையறியாது புலம்பெயர்ந்த பறவைகளை சூழலுக்கு, தாய்மொழிச் சூழலுக்குத் திரும்பச் செய்கிற, செய்ய முடிகின்ற வீரம் படைத்த வன் எம் தலைவன் அன்றே எழுந்துவிட்டான்.

பிய்ந்து போன பூக்களாக மாறியிருந்த வாழ்வை மாற்றவும், கல்நெஞ்சம் கொண்ட திரிகணப் பிளக்கும் பாறை போன்ற நெஞ்சுறுதி கொண்ட எம் தலைவன் பூக்களுக்குள்ளும், பூகம்பங்களை சூல்கொள்ள வைத்தான். பூக்களே எதிரியின் கரங்களை முறித்தன. பூக்

எரிக்கும் வெக்கையில் மினுமினுத்துக்கிடக்கிறது. பூர்வீகக் குடியின் நிலமே எரிந்துபோய் பிணமாகக் கிடக்கிறது. பிணத்தின் மேல் உட்கார்ந்திருக்கிற கடைசிப் பூர்வீககுடியின் நா வறண்டு சூடான மூச்சுக்காற்று தீப்பற்றி, அவனும் எரிகிற வேளை தாய்மொழியில் கருகி அழிகிறது. மொழியின் கதறல் சூன்யத்தில் நிறைகிறது.

இது ஒரு பயங்கர கனவு. எதிர்காலம் தாய்மொழி நிறைந்திராத பாலைவனச் சூழலாகிவிடும் என்பதை நிச்சயித்துக் கூறுவதற்கில்லை. எனினும் அப்படியானதொரு சூழலை தாய் மொழிப்பற்றுக் கொண்டவரது மனம் நினைத்துப் பார்ப்பதிலிருந்தேகூட வெறுத்து ஒதுக்கித் தள்ளிவிடும். தாய்மொழி உயிர் வாழ்க்கையில் உயிர்களுக்கு உயிர். தாய்மொழிகள் சிதைந்து விட்ட எந்தவிதமான ஒற்றைமாதிரிக் கலாசாரமும் மேற்குறிப்பிட்ட பாலைவனச் சூழலுக்கு ஒப்பானதாகும்.

புரியாதவொரு மையத்திலிருந்து எழும் தாழை வாசம், மகிழம்வாசம், மல்லிகைவாசம், இன்னும் பல மலர்களின் வாசம் கமழுகிறது. கூன் நிமிர்கிறது. மொட்டை மரம் கிளைகள் விரிந்து தழைகிறது. அலைபுரளும் நதிக்கரையில் நாகம் தலைவிரித்து ஆடுகிறது. தூரத்தி லிருந்து காற்றோடு வருகிற புல்லாங்குழலின் இசை யில் நாகம் சொக்கி அசைகிறது.

புரியாதவொரு மையத்திலிருந்து எழும் வாசங்களும் உயிர்ப்பாய் தமிழ்த் தாய்மொழி பூர்வீககுடியின் மனதில் உறைகிறது. பூர்வீககுடியின் நிலத்துக்கு உயிர் கொடுக்க வேண்டுமெனில் தாய்மொழி உயிர்ப்புடன் இருக்கவேண்டியதாய் இருக்கிறது. உயிர்ச் சூழலுக்கான உயிர் தனித்துவமான தாய்மொழிக்குள் இருக்கிறது.

**கரிகாலன்**

*மறுக்கும் கரைகளில்*
*அலைகளில் மிதக்கும்*
*அடைக்கலம் தேடும்*
*என் குருதிக் கொடிகள்*
*முடக்கப்பட்ட - உன்*
*முகாம்களில் கேட்டேன்.*
*துரத்தப்பட்ட - உன்*
*சுவடுகளில் உணர்ந்தேன்.*
*எனக்கும் வேர்விட*
*இடமில்லை என்பதை.*

**- இன்குலாப்.**

நான் என் தாய்மொழியின் குருதிக்கொடி. என் இரத்தம் தாய் மொழி. தொன்மதொன்மமாய் கணு வெடித்து, கொடி வளர்ந்து, என்னிதயத்திலிருந்தும் நான் யாரோடிருந்துமாய் பின்னிப் பரவுகிற என் குருதிக் கொடியின் குருதிக்கொடி. அவன் நிலத்திலிருந்து

## தாய் மொழி எழுத்தசைவு
## பூர்வ குடித்தமிழரின் இயற்கை வரம்

பிடுங்கியெறியப்பட்ட என் கரைகளில் உயிர் துடிக்கச்சேரும்போது, அள்ளி அகதிமுகாம்களில் அடைக்கப்பட்ட போது உதிரம் துடித்தது. சுவடுகள் கைப்பிடி மண்ணாய் சுருட்டி அள்ளியெறியப்பட்டபோது என்னில் இந்தக் குருதிக்கொடித் தண்டுகளில் உதிரம் வெடித்துக்கொட்டியது.

வெலிக்கடைச்சிறையில் என் குருதிக்கொடி வெட்டப்பட்டபோது என் தண்டுகளில் ரணம் கொண்டு வலித்தது. இந்த வலியைத் தந்தது என் தாய்மொழி. என் குருதிக்குளத்தில் வேரூடும் என் தாய்மொழியுணர்வு கொப்பளித்தது. இதைப் போன்றதெனில் அது என் பூர்வீககுடியின், அதாவது ஆதிக் குருதிக் கொடியின் தாய் மொழித் தோற்றுவாய் இரகசியத்தைப் போன்றது.

நான் என் தமிழ்சூழல் தோய்ந்த காற்றில் வேர்விடுகிறவன். என் சுவடுகள் அந்தரங்க வெளியில் பதிந்து நடப்பவை. என் இருப்பு தாய் மொழியின் இருப்பு என்னைத் தண்டிக்க, என் நிலத்திலிருந்து என்னைத் துண்டிக்க என் தாய்மொழியை அறுத்துவிடு. என் தாய் மொழியை அறுக்க வேண்டுமெனில் நீ முதலில் காற்றை அறு. காற்றிலிருந்து என் தாய் மொழியை துண்டித்து விடு. முடிந்தால் என் சுவடுகளை காற்றில் அழிக்கிறதும் சாத்தியமில்லை.

-நன்றி செம்பருத்தி-

# வன்னிமன்னவனின் சுதந்திர தாகம்

காலப்பதிவில் கலந்து மறைவுண்டது
என் வாழ்க்கைப் பயணம் - மரணங்கள்
மலிவான ஈழமண்ணில் மனிதநேயம்
மனுதர்மம் பாசம் புதையுண்டு போய் பல காலம்

ஈழத்தாய் விழிகளில் ரத்தக்கண்ணீர்
உயிர் விட்ட ஈழத்து உறவுகளை
தாங்கி நிற்கும் சுமைதாங்கியாய்
இருளடைந்த முகமோடு நிற்கின்றாள்.

காய்ந்து கிடக்கும் ரத்தக்கறையில்
தமிழன் உயிர் நீக்க அடையாளச் சின்னம்
என் நினைவுகளில் விரிகின்றது
முதிர்வின் கடைசிப் பக்கத்தில்



நீறு பூத்த நெருப்பாய் எரியும்
மனிதர்கள் இப்போது நான்
அடி முட்டாள் ஆக்கப்பட்டவன்

பேச முடியாத மௌனியாய்
புன்னகையே என் பரிபாஷை
குண்டின் சிதறல்களால்
துளையிடப்பட்டு சிதைந்து
நொருக்கப்பட்ட என்அழகு - ஊர்
காண புண்பட்ட மனதோடு நடக்கின்றேன்.

எவருடனும் பேச பார்க்க விரும்பவில்லை
என் இதயக் கூட்டுக்குள் எரியும்
எரிமலைக் குழம்பு துயரத்தின்
கதையே இப்போது முன்னே தெரிகிறது.

என்னை எவர்க்கும் பிடிக்காதாம்
முகம் பார்த்து கதைக்க விருப்பமில்லையாம்
மனித வர்க்கம் எனக்கிட்ட பட்டம்
முட்டாள் வாழத் தெரியாதவன்.

பெரும் மூச்சுக் காற்று வெளிப்பட
நடக்கிறேன் ஊரில் கால்பதித்து
ஓர் கணம் அசையாதுகால்கள் நின்றது

முல்லைச் சிரிப்புடனே வண்ணக்கதை பேசி
சிரித்து மகிழும் தளிர்கள் எதிர்காலச் சிற்பிகள்
தாமென கம்பீரமுடன் அவர்களின் பொன் முகங்கள்

ஆசிரியரின் கனிவான குரல்
பிள்ளையள் உங்களுக்கு பண்டார
வன்னியன் கதை தெரியுமோ
அவற்ற கதையை சொல்றன்
கேளுங்கோ பிள்ளைகள் .

என் அந்தநாள் நினைவுகள்
ஞாபகம் அதனை மீட்டுப் பார்க்கின்றேன்.
டேய் காக்கை வன்னியா காட்டிக்
கொடுத்த துரோகியே வரலாறு உன்னை
ஒரு போதும் மன்னிக்காது - கேளடா

என்னைப் போல் ஆயிரம் ஆயிரம்
பண்டார வன்னியர்கள் தோன்றுவார்கள்
தாய் மண்ணே உன்மகன் போய் வருகிறான்
விடைகொடு வாழ்க தமிழ் வீரமும் மானமும் .

வரிப் புலி உடையோடு புலி வீரரின்
தோற்றம் புழுதியின் நடுவே
தெரிகிறது சந்தோஷப் பூக்கள்
நொந்து போன என் இதயத்துக்கு ஆறுதலாய்
இளந் தென்றல் தாலாட்டி போகிறது என்னுள் கலந்து.

புதிய தேசத்தின் சந்தோஷப் பூக்கள்
என் விழிகளில் தெரிகிறது
புத்துயிர் பெற்று ஒளிரும்
என் ஊர் பரப்பு வெளிகள்

வன்னி மன்னவனின்
சுதந்திர தாகத்தின்
உணர்வை எண்ணியே
அவன் நினைவுக் கல்லுக்கு மலர் தூவுகின்றது
அஞ்சலித்து என் கரங்கள்.

-பவித்திரா-